
செ. முத்துக்குமாரு

# சோதிடமலர்

## SOTHIDA MALAR



உள்ளே............

- ❋ அதிஷ்ட எண்களில் தொழில்
- ❋ எண்சோதிடத்தில் எண் 8
- ❋ நவராத்திரி விரதம் எப்போது?
- ❋ காகங்களின் முன்னறிவிப்பு
- ❋ எண்சோதிடர் பதில்கள்
- ❋ குறுக்கெழுத்துப் போட்டி

இன்னும் பல

ரக்தாக்ஷி ௵ புரட்டாதி ௴ (16-9-84 — 16-10-84) ரூபா: 3-00

சரஸ்வதீ சரஜிஜகேசர ப்ரபா
தபஸ்விநீ சிதகமலாசன ஸதிதா |
தஸ்விநீ கமல விலோசசக்ஷுஷீ
மநஸ்விநீ பவது வரப்ரசாதிநீ. | |

❋

* பணிவை மேற்கொள்பவனே மூவுலகையும் ஆளவல்லவன். யாவரையும் வசீகரிக்க வல்லவனுமாகிறான்.

* அதிக ஆசையினால் சாந்தியும் ஞானமும் உண்டாகாது. ஈஸ்வரபக்தியும் கை கூடுவதில்லை.

* அறநெறி வாழ்வுக்கும், ஆத்மீக வாழ்வுக்கும் தன்னடக்கமே இன்றியமையாதது.

* பற்றற்ற சேவையின் மூலம் பரிசுத்தமடைந்த மனதில்தான் திவ்ய ஞான ஒளி பிரகாசிக்கும்.

* உலகப் பொருட்களின் அநித்யத்தை நன்கு உணர்ந்தால்தான், பரம் பொருளின் ஞானமும் அதையறியும் ஊக்கமும் மனதில் எழும்.

❋

மக்கள் அனுசரிக்க வேண்டிய சாமான்ய தர்மங்களில் முதலாவது அன்பு. அடுத்தது சத்யம். வாக்கும் மனசும் ஒன்றாக இருப்பதே சத்யமாகும். இறைவன் மனிதனுக்குப் பேசும் சக்தியைக் கொடுத்திருப்பதே மனதில் உள்ளதை வெளியிடுவதற்கேயாகும். மனமும் வாக்கும் ஒன்றுபடுவது மட்டுமல்ல, நல்ல மனதிலே தோன்றுகின்ற நல்ல எண்ணங்களை வாக்கில் சொல்வதே சத்யத்தின் உயர்ச்சியாகும். மக்களுக்கு நன்மைபயப்பதாகவும், பிரியமாகவும் எது இருக்கின்றதோ அதுவே சத்யமாகும். பேச்சினாலும் செயலினாலும் உயிர்களுக்கு நன்மை உண்டாக்குவதே சத்யமாகும். மனமும் வாக்கும் ஒன்றுபட்டிருப்பது, மனம் சுத்தமாக இருப்பது வாக்கு சாந்தமாகவும், நன்மையாகவும் இருப்பது தனக்கு மனச் சுத்தியையும் பிறருக்கு நன்மை செய்வது இவையெல்லாம் சத்யத்தின் லக்ஷணங்களாகும்.

உ

# சோதிடமலர்

SOTHIDA MALAR

சோதிட மாத சஞ்சிகை

ஆசிரியர்:
பிரம்மஸ்ரீ கி. சதாசிவ சர்மா
(சம்ஸ்கிருத பண்டிதர்)

ரக்தாக்ஷி ஸ்ரீ புரட்டாதி மீ
( 16 - 9 - 84 )

மலர் 7 | இதழ் 6

## உள்ளே.....................

| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1 | நாள் எப்படி? | ... | 2 |
| 2 | உதயலக்கினம் காணும் பதகம் | ... | 4 |
| 3 | புரட்டாதி மாதக் கிரகநிலை | ... | 5 |
| 4 | கால ஹோரைகள் | ... | 6 |
| 5 | புரட்டாதி மாத வானியற்காட்சி | ... | 7 |
| 6 | சோதிடம் கற்போம் | ... | 8 |
| 7 | இம்மாதம் உங்களுக்கு எப்படி? | ... | 9 |
| 8 | அதிஷ்ட எண் ஞானம் | ... | 17 |
| 9 | அபரக் கிரியைகள் | ... | 19 |
| 10 | எண்சோதிடத்தில் எண் 8 | ... | 20 |
| 11 | அன்னையைக் கண்டேன் | ... | 22 |
| 12 | சந்தேக நிவிர்த்தி | ... | 24 |
| 13 | காகங்களின் முன்னறிவிப்புகள் | ... | 27 |
| 14 | எண்சோதிடர் பதில் | ... | 29 |
| 15 | அதிஷ்ட எண்களில் தொழில் | ... | 30 |
| 16 | குறுக்கெழுத்துப் போட்டி | ... | 32 |

# நாள் எப்படி?

புரட் 1 ஞா (16-9-84) ஷஷ்டி பி. இ: 1-54 வரை, கார்த்திகை இரவு 9-03 வரை, சித்தம், கார்த்திகை விரதம். அசுபதினம்.
ராகு 4-33 — 6-03

புரட் 2 திங் (17-9-84) ஸப்தமி பி.இ. 2-50 வரை, ரோகிணி இரவு 10-43 வரை, அமிர்தசித்தம். சுபகருமங்கள் செய்யலாம். ராகு 7-33 — 9-03

புரட் 3 செவ் (18-9-84) அஷ்டமி பி.இ, 3-01 வரை, மிருகசீரிடம் - சித்தம் இரவு 11-40 வரை சுபதினமன்று. ராகு 3-03—4-33

புரட் 4 புத (19-9-84) நவமி பி. இ. 2-22 வ, திருவாதிரை இரவு 11-49 வரை. சித்தம். சுபதினமன்று.
ராகு 12-03 — 1-33

புரட் 5 வியா (20-9-84) தசமி இரவு 12-54 வரை, புனர்பூசம் இரவு 11-08 வரை, அமிர்தசித்தம். சுபகருமங்கள் மேற்கொள்ளலாம்.
ராகு 1-33 — 3-03

புரட் 6 வெ (21-9-84) ஏகாதசி இரவு 10-39 வரை, பூசம் இரவு 9-41 வரை, மரணம், ஸர்வஏகாதசி விரதம். சுபகருமங்களை விலக்குக.
ராகு 10-33—12-03

புரட் 7 சனி (22-9-84) துவாதசி மாலை 7-45 வரை, ஆயிலியம்-மரணம் மாலை 7-35 வரை, சுபகருமங்களுக்கு நன்றல்ல. ராகு 9-03 — 10-33

புரட் 8 ஞாயி (23-9-84) திரயோதசி மாலை 4-20 வ. மகம்-மரணம் மாலை 4-57 வரை, பிரதோஷ விரதம். அசுபதினம். ராகு 4-32 — 6-02

புரட் 9 திங் (24-9-84) சதுர்த்தசி ப. 12-35 வரை, பூரம் பகல் 1-59 வரை, சித்தம். மஹாளய அமாவாசை விரதம். பிதுர் தர்ப்பணத்தால் பாபங்கள் நீங்கும், ராகு 7-32 — 9-02

புரட் 10 செவ் (25-9-84) அமாவாசை கா. 8-41வ. பிரதமை பி.இ. 4-50 வரை. உத்தரம் பகல் 10-54 வரை, அமிர்தசித்தம், நவராத்திரி ஆரம்பம். காலை 8-41 இன் மேல் வயல் தோட்டச் செய்கைகள் செய்ய நன்று. ராகு 3-02 — 4-32

புரட் 11 புத (26-9-84) துவிதீயை பி, இ. 1-12 வ. அத்தம் காலை 7-51 வரை, சித்தம் பி: இ. 5-04வ. சித்தம். சந்திர தரிசனம், சுபகருமங்கள் செய்யலாம். ராகு 12-02 — 1-32

புரட் 12 வியா (27-9-84) திரிதியை இரவு 9-57 வ. சுவாதி பி. இ. 2-42 வரை, அமிர்தசித்தம். சுபகருமங்களை மேற்கொள்ளலாம்.
ராகு 1-32 — 3-02

புரட் 13 வெ (28-9-84) சதுர்த்தி மாலை 7-16 வ. விசாகம் இரவு 12-54 வரை, சதுர்த்தி விரதம் சுபகருமங்களுக்கு உகந்ததல்ல.
ராகு 10-32 — 12-02

புரட் '4 சனி (29-9-84) பஞ்சமி மாலை 5-12 வரை, அனுஷம் இரவு 11-48 வரை, சித்தம். சுபகருமங்கள் மேற்கொள்ளலாம். ராகு 9-02—10-32

புரட் 15 ஞா (30-9-84) ஷஷ்டி பகல் 3-54 வரை, கேட்டை-மரணம் இரவு 11-26 வரை, ஷஷ்டி விரதம். அசுபதினம். ராகு 4-32 — 6-02

புரட் 16 திங் (1-10-84) ஸப்தமி பகல் 3-22 வரை, மூலம் - சித்தம் இரவு 11-49 வரை, கரிநாள். ஷரஸ்வதி பூஜாரம்பம். சுபகருமங்களை விலக்குக.
ராகு 7-32 — 9-02

புரட் 17 செவ் (2-10-84) அஷ்டமி பகல் 3-35 வ. பூராடம்-சித்தம் இரவு 12-55 வரை, அசுபதினம்
ராகு 3-02 — 4-32

புரட் 18 புத (3-10-84) நவமி மாலை 4-29 வரை. உத்தராடம் பி. இ. 2-38 வரை, அமிர்தசித்தம். மஹாநவமி, ஸரஸ்வதி பூஜை. ராகு 12-02 – 1-32

புரட் 19 வியா (4-10-84) தசமி மாலை 5-58 வரை, திருவோணம் பி இ. 4-51 வரை, சித்தம். விஜயதசமி, கேதாரகௌரி விரதாரம்பம். காலை வித்தியாரம்பம் முதலியன செய்ய நன்று: மாலை கேதாரகொரி விரதம் ஆரம்பிக்கலாம்.
ராகு 1-32 — 3-02

புரட் 20 வெ (5-10-84) ஏகாதசி - மரணம் மாலை 7-52 வரை, அவிட்டம் முழுவதும், ஸர்வ ஏகாதசி விரதம். சுபகருமங்களை விலக்குக.

புரட் 21 சனி (6-10-84) துவாதசி இரவு 10-06 வ. அவிட்டம் காலை 7-26 வரை, சித்தாமிர்தம். அவசிய கருமங்களைச் செய்யலாம்.
ராகு 9-02—10-32

புரட் 22 ஞாயி (7-10-84) திரயோதசி இரவு 12-31 வரை, சதயம் பகல் 10-14 வரை, சித்தம், பிர தோஷவிரதம் சுபகருமங்கள் செய்யலாம். ராகு 4-32—6-02

புரட் 23 திங் (8-10-84) சதுர்த்தசி பி.இ. 3-00 வ. பூரட்டாதி - மரணம் பகல் 1-14 வரை, நடேசரபி டேகம் பகல் 1-14 இன் மேல் முக்கிய கருமங்களைச் செய்யலாம். ராகு 7-32—9-02

புரட் 24 செவ் (9-10-84) பூரணை பி இ. 5-29 வரை, உத்தரட்டாதி மாலை 4-13வரை, அமிர்தம் பூரணை விரதம் காமேஸ்வரி பூஜை வயல் தோட்டச் செய் கைகள் மேற்கொள்ள நன்று. ராகு 3-02—4-32

புரட் 25 புத (10-10-84) பிரதமை முழுவதும், ரேவதி மாலை 7-10 வரை, மரணம். அசுபதினம். ராகு 12-02—1-32

புரட் 26 வியா (11-10-84) பிரதமை காலை 7-53வ. அசுவினி இரவு 9-59 வரை, அமிர்தசித்தம். சுப கருமங்கள் செய்யலாம். ராகு 1-32—3-02

புரட் 27 வெள் (12-10-84) துவிதியை பகல் 10-07 வரை, பரணி இரவு 12-35 வரை, சித்தம். அசு பதினம். ராகு 10-32—12-02

புரட் 28 சனி (13-10-84) திரிதியை பகல் 12-04 வ. கார்த்திகை பி.இ. 2-53 வரை, அமிர்தசித்தம் கார்த்திகைவிரதம் அசுபதினம் ராகு 9-02—10-32

புரட் 29 ஞாயி (14-10-84) சதுர்த்தி பகல் 1-39வ. ரோகிணி பி.இ. 4-55 வரை, சித்தம், கரிநாள், சுபகருமங்களுக்கு நன்றல்ல. ராகு 4-32—6-02

புரட் 30 திங் (15-10-84) பஞ்சமி பகல் 2-44வரை மிருகசீரிடம் முழுவதும், அமிர்தசித்தம். அவசிய கருமங்களைச் செய்யலாம். ராகு 7-32-9-02

புரட் 31 செவ் (16-10-84) ஷஷ்டி பகல் 3-15வ மிருகசீரிடம் - சித்தம் காலை 6-05 வரை, வயற் செய்கை, தோட்டச்செய்கை, நெல்விதைப்பு என் பன செய்யலாம். ராகு 3-02—4-32

# இம்மாத விசேடம்

## நவராத்திரி நாயகியர்

ஆதிபராசக்தியே கார்யோன் முகியாக இருக் கும்போது துர்க்காதேவியாகவும், உலக வாழ்க் கையில் ஈடுபடும் மக்களுக்கு பொருட்செல்வத்தை கொடுப்பவளாதலால் மகாலக்ஷ்மியாகவும், தம்மை வழிபடும் மக்களுக்கு ஞானத்தைக் கொடுப்பதால் சரஸ்வதிதேவியாகவும் விளங்குகிருள்.

விரத்தை உருவமாகக் கொண்ட இவள் 'துர்க்கன்' என்ற அசுரனை அழித்ததினாலும் பயம் பிணி, பிறவித்துன்பம் முதலிய துன்பங்களை நீக் குபவளாதலாலும் காடு மலைகளில் வாசம் செய் பவளாதலாலும் துர்க்கா எனப்பல காரணங்க ளால் அழைக்கப்படும் ஸ்ரீதுர்க்கை நவராத்திரி காலங்களில் முதல் மூன்று தினங்களிலும் வீரத் தைக் குறித்து வழிபாட்டுக்குரியவளாகிருள்.

மகாவிஷ்ணுவின் சக்தியாக விளங்கும் மகா லக்ஷ்மி நவராத்திரி காலத்தில் நடு மூன்று தினங் களிலும், தனம் தரும் செல்வந் தரும் செல்வநா யகியாக போற்றப்படுகிருள்.

எங்கும் எல்லோரிடத்திலும் கலை, ஞாதிவடி வினளாக வியாபித்து சிறுவர் முதல் பெரியோர் வரை கலைஞான சக்தியாக விளங்கி அவர்களால் இறுதி மூன்று தினங்களிலும் சரஸ்வதி தேவியாக வழிபடப்பெறுகிருள்.

## கேதாரகௌரீ விரதம்

ஆஸ்வயுக் சுக்லபக்ஷேது தசமி யுக்த வாசரே
கௌரீ வ்ரதம் சமாரப்ய ... ... ...

என்னும் வாக்குப்படி - ஆஸ்விஜ சுத்த சுக்லபக்ஷத் தசமித் திதியன்று குருவின் ஆசியுடன் இவ்விர தத்தை தொடங்கவேண்டும். இருபத்தொரு இழைகள் கொண்ட நூலில் இருபத்தொரு முடிச் சிட்டு கும்பத்தில் அல்லது பூஜை செய்த லிங்கத் தில் (அம்பாளில்) சாத்தி இருபத்தொரு தினங் கள் ஆசாரத்துடன் அவகம் துலக்கி இருபத்தோ ராவது திதியான (ஐப்பசி மாத) அமாவாசை யன்று இரவில் திரும்பவும் பூஜை செய்து அந்நூ லைப் பெண்கள் தமது இடக்கையில் கட்டிக் கொள்ளவேண்டும்.

இவ்விரதத்தை மாதவிலக்கு நீங்கிய பெண் களும் ஐந்து மாதத்துக்கு மேற்படாத கர்ப்பிணிப் பெண்களும் இருபத்தொரு தினங்களும் விரதம் இருக்கலாம். இத்தினங்களுள் மாதவிலக்குண்டா கும் பெண்கள் அமாவாசைத் திதிக்கு முன் 4, 9, 7, 3 நாட்களோ அல்லது அன்று மட்டுமோ விரதமிருந்து இந்நூலைக் கையிற் கட்டலாம்.

இவ்விரதத்தை பக்தியுடன் அனுஷ்டிப்பவர் கள் சிறந்த செல்வத்தையும், மனதிற்குகந்த நல்ல கணவனையும், சிறந்த புத்திரர்களையும் பெற்று நீண்ட ஆயுளுடன் சிறந்து வாழ்வார்கள்.

# உதயலக்னம் காணும் பதகம் (யாழ்ப்பாணம்)

ரக்தாக்ஷி ஹூ புரட்டாதி மீ 1-ந் தேதி முதல் 31-ந் தேதி வரை. (16-9-84 முதல் 16-10-84 வரை)

| இங் | ழி | வாரம் | கன்னி | | துலாம் | விருச்சி | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் | மேடம் | இடபம் | மிதுன | கடகம் | சிங்கம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| செப் | புரட் | | ம.மி. முதல் (காலை) | ம.மி. வரை | ம. மி. வரை (காலை) | ம. மி. வரை (பகல்) | ம. மி. வரை (பகல் | ம. மி. வரை (பி.ப) | மி. ம. வரை (மாலை) | ம. மி. வரை (இரவு) | ம. மி. வரை (இரவு) | ம. மி வரை (இரவு ) | ம. மி. வரை (பி .இ) | ம. மி. வரை (பி.இ) | ம. மி வரை) (பி.இ) |
| 16 | 1 | ஞாயி | 6 04 | 8 03 | 10 07 | 12 17 | 2 25 | 4 21 | 6 06 | 7 49 | 9 38 | 11 48 | 1 52 | 3 59 | 6 00 |
| 17 | 2 | திங் | 6 01 | 7 59 | 10 03 | 12 13 | 2 21 | 4 17 | 6 02 | 7 45 | 9 34 | 11 44 | 1 48 | 3 55 | 5 56 |
| 18 | 3 | செவ் | 5 56 | 7 55 | 9 59 | 12 09 | 2 17 | 4 13 | 5 58 | 7 41 | 9 30 | 11 40 | 1 44 | 3 51 | 5 52 |
| 19 | 4 | புத | 5 52 | 7 51 | 9 55 | 12 05 | 2 13 | 4 09 | 5 54 | 7 37 | 9 26 | 11 36 | 1 40 | 3 47 | 5 48 |
| 20 | 5 | வியா | 5 49 | 7 47 | 9 51 | 12 01 | 2 09 | 4 05 | 5 50 | 7 33 | 9 22 | 11 32 | 1 36 | 3 43 | 5 44 |
| 21 | 6 | வெள் | 5 45 | 7 43 | 9 47 | 11 57 | 2 05 | 4 01 | 5 46 | 7 29 | 9 18 | 11 28 | 1 32 | 3 39 | 5 40 |
| 22 | 7 | சனி | 5 41 | 7 40 | 9 44 | 11 54 | 2 02 | 3 58 | 5 43 | 7 26 | 9 15 | 11 25 | 1 29 | 3 36 | 5 37 |
| 23 | 8 | ஞாயி | 5 38 | 7 36 | 9 40 | 11 50 | 1 58 | 3 54 | 5 39 | 7 22 | 9 11 | 11 21 | 1 25 | 3 32 | 5 33 |
| 24 | 9 | திங் | 5 34 | 7 31 | 9 35 | 11 45 | 1 53 | 3 49 | 5 34 | 7 17 | 9 06 | 11 16 | 1 20 | 3 27 | 5 28 |
| 25 | 10 | செவ் | 5 29 | 7 27 | 9 31 | 11 41 | 1 49 | 3 45 | 5 30 | 7 13 | 9 02 | 11 12 | 1 16 | 3 23 | 5 24 |
| 26 | 11 | புதன் | 5 25 | 7 23 | 9 27 | 11 37 | 1 45 | 3 41 | 5 26 | 7 09 | 8 58 | 11 08 | 1 12 | 3 19 | 5 20 |
| 27 | 12 | வியா | 5 21 | 7 19 | 9 23 | 11 33 | 1 41 | 3 37 | 5 22 | 7 05 | 8 54 | 11 04 | 1 08 | 3 15 | 5 16 |
| 28 | 13 | வெள் | 5 17 | 7 15 | 9 19 | 11 29 | 1 37 | 3 33 | 5 18 | 7 01 | 8 50 | 11 00 | 1 04 | 3 11 | 5 12 |
| 29 | 14 | சனி | 5 13 | 7 11 | 9 15 | 11 25 | 1 33 | 3 29 | 5 14 | 6 57 | 8 46 | 10 56 | 1 00 | 3 07 | 5 08 |
| 30 | 15 | ஞாயி | 5 09 | 7 07 | 9 11 | 11 21 | 1 29 | 3 25 | 5 10 | 6 53 | 8 42 | 10 52 | 12 56 | 3 03 | 5 04 |
| 1 | 16 | திங் | 5 04 | 7 03 | 9 07 | 11 17 | 1 25 | 3 21 | 5 06 | 6 49 | 8 38 | 10 48 | 12 52 | 2 59 | 5 00 |
| 2 | 17 | செவ் | 5 01 | 6 59 | 9 03 | 11 13 | 1 21 | 3 17 | 5 02 | 6 45 | 8 34 | 10 44 | 12 48 | 2 55 | 4 56 |
| 3 | 18 | புதன் | 4 57 | 6 55 | 8 59 | 11 09 | 1 17 | 3 13 | 4 58 | 6 41 | 8 30 | 10 40 | 12 44 | 2 51 | 4 52 |
| 4 | 19 | வியா | 4 53 | 6 51 | 8 55 | 11 05 | 1 13 | 3 09 | 4 54 | 6 37 | 8 26 | 10 36 | 12 40 | 2 47 | 4 48 |
| ஐ 5 | 20 | வெள் | 4 49 | 6 47 | 8 51 | 11 01 | 1 09 | 3 05 | 4 50 | 6 33 | 8 22 | 10 32 | 12 36 | 2 43 | 4 44 |
| 6 | 21 | சனி | 4 45 | 6 43 | 8 47 | 10 57 | 1 05 | 3 01 | 4 46 | 6 29 | 8 18 | 10 28 | 12 32 | 2 39 | 4 40 |
| 7 | 22 | ஞாயி | 4 41 | 6 39 | 8 43 | 10 53 | 1 01 | 2 57 | 4 42 | 6 25 | 8 14 | 10 24 | 12 28 | 2 35 | 4 36 |
| 8 | 23 | திங் | 4 37 | 6 35 | 8 39 | 10 49 | 12 57 | 2 53 | 4 38 | 6 21 | 8 10 | 10 20 | 12 24 | 2 31 | 4 32 |
| 9 | 24 | செவ் | 4 33 | 6 31 | 8 35 | 10 45 | 12 54 | 2 49 | 4 34 | 6 17 | 8 06 | 10 16 | 12 20 | 2 27 | 4 28 |
| 10 | 25 | புதன் | 4 29 | 6 27 | 8 31 | 10 41 | 12 50 | 2 45 | 4 30 | 6 13 | 8 02 | 10 12 | 12 16 | 2 23 | 4 24 |
| 11 | 26 | வியா | 4 24 | 6 23 | 8 27 | 10 37 | 12 46 | 2 41 | 4 26 | 6 09 | 7 58 | 10 08 | 12 12 | 2 19 | 4 20 |
| 12 | 27 | வெள் | 4 20 | 6 19 | 8 23 | 10 33 | 12 42 | 2 37 | 4 22 | 6 05 | 7 54 | 10 04 | 12 08 | 2 15 | 4 16 |
| 13 | 28 | சனி | 4 16 | 6 15 | 8 19 | 10 29 | 12 38 | 2 33 | 4 18 | 6 01 | 7 50 | 10 00 | 12 04 | 2 11 | 4 12 |
| 14 | 29 | ஞாயி | 4 13 | 6 11 | 8 15 | 10 25 | 12 34 | 2 29 | 4 14 | 5 57 | 7 46 | 9 56 | 12 00 | 2 07 | 4 08 |
| 15 | 30 | திங் | 4 09 | 6 07 | 8 11 | 10 21 | 12 30 | 2 25 | 4 10 | 5 53 | 7 42 | 9 52 | 11 56 | 2 03 | 4 04 |
| 16 | 31 | செவ் | 4 05 | 6 03 | 8 07 | **10 17** | **12 26** | 2 21 | 4 06 | 5 49 | 7 38 | 9 48 | 11 52 | 1 59 | 4 00 |

* இப்பதகத்தின் உதவியுடன் ஒரு குழந்தை ஜனனமான நேரத்துக்குரிய இலக்கினத்தை இலகுவில் அறிந்து கொள்ளலாம்.

உ-ம்: புரட் 31வ (16-10-84) பகல் 11-00 மணிக்கு என்ன லக்னம்? தடித்த எழுத்திலுள்ளதை கவனிக்க. (10-17—12-26) தனுசு லக்னம்

# புரட்டாதி மாதக் கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| மீனம் | மேடம் | இடபம்<br>ராகு | மிதுனம் |
| கும்பம் | புரட்டாதி மாதக் கிரக நிலை | | கடகம் |
| மகரம் | | | சிம்மம்<br>புத |
| தனுசு<br>குரு, நெப் | விருச்சிகம்<br>குஜ, கே யூரே | துலாம்<br>சனி | கன்னி<br>சுக் சூரி |

## கிரக மாற்றங்கள்

5உ (20-9-84) மாலை 4-58க்கு துலா-சுக்

10உ (25-9-84) பி. இ. 4-31க்கு தனு-குஜ

12உ (27-9-84) பகல் 12-49க்கு கன்-புத

29உ (14-10-84) பகல் 12-30க்கு துலா-புத

29உ (15-10-84) காலை 5-57க்கு விரு-குஜ

12உ புதன் அஸ்தமனம்

## சந்திரனது இராசிநிலை

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| புரட் | 3உ | (18-9-84) | பகல் | 11-17 | முதல் | மிதுனம் |
| | 5உ | (20-9-84) | மாலை | 5-22 | ,, | கடகம் |
| | 7உ | (22-9-84) | மாலை | 7-34 | ,, | சிங்கம் |
| | 9உ | (24-9-84) | மாலை | 7-13 | ,, | கன்னி |
| | 11உ | (26-9-84) | மாலை | 6-25 | ,, | துலாம் |
| | 13உ | (28-9-84) | மாலை | 7-17 | ,, | விருச்சிகம் |
| | 15உ | (30-9-84) | பி. இ. | 11-25 | ,, | தனுசு |
| | 18உ | (3-10-84) | காலை | 7-17 | ,, | மகரம் |
| | 20உ | (5-10-84) | மாலை | 6-06 | ,, | கும்பம் |
| | 23உ | (8-10-84) | காலை | 6-28 | ,, | மீனம் |
| | 25உ | (10-10-84) | மாலை | 7-09 | ,, | மேடம் |
| | 28உ | (13-10-84) | காலை | 7-11 | ,, | இடபம் |
| | 30உ | (15-10-84) | மாலை | 5-29 | ,, | மிதுனம் |

**கிரகநிலை குறிக்க:-**

* 4-ம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள பதகத்தின்படி புரட்டாதி 31உ பகல் 11-00 மணிக்கு தனுசு லக்னம் என அறிந்து கொண்ட பின் தனுசு என்ற கூட்டில் 'ல' என்று குறித்துக் கொள்ளவும். கிரகநிலையை அனுசரித்து மாற்றமடைந்த கிரகங்களையும் கவனித்து கிரகநிலை குறிக்கவும். லக்னம் முதல் வலமாக 1முதல் 12 வரை இலக்கமிடுக,

**மாதபலன்**

இம்மாதம் நாட்டில் பொருளாதாரம் மிகவும் கஷ்டமுறும். நிம்மதியின்மையும் பயப்பாடுகளும் இடையிடையே தலைதூக்கியவண்ணம் இருக்கும். தொற்று நோய்கள் பரவ இடமுண்டு. விவசாயம் முதலிய பூமி சம்பந்தமான தொழில்களில் ஈடுபாடு அதிகமாகும். பொதுவாக நாட்டில் சுபீட்சம் குறைந்தே காணும்.

# நலந்தரும் கால ஹோரைகள்

**சூரிய ஹோரை:-** உத்தியோகம், வியாபாரம் செய்ய, அரசாங்கத்திடம் சலுகைபெற, பெரிய உத்தியோகத்தரைக் காண, அரசாங்க அலுவல்கள் தொடங்க, பிதா வர்க்கத்தாருடன் பேச்சுக்கள் நடத்த நலம்.

**சந்திர ஹோரை:-** ஸ்திரீகளைப்பற்றிப் பேசுவது, கேள்விகள் கேட்பது, கவர்ச்சியான பேச்சுக்களை ஆரம்பிக்க, மாதாவர்க்கத்தாருடன் பேச உசிதம். தோம்பு சம்பந்தப்பட்ட நீண்டகால விஷயங்கள் இதில் செய்யக்கூடாது.

**செவ்வாய் ஹோரை:-** உள்ளக்கருத்துக்களை மறைமுகமாகவைப்பது நலம். பூமிச்செய்கைகள் (மண்ணைக் கிண்டுதல், கொத்துதல் போன்றன) செய்ய, போருக்குப்புறப்பட, ஓமம், அக்கினி சம்பந்தமான வேலை ஆரம்பிக்க, உடற்பயிற்சி முதலியனவற்றிற்கு நன்று.

**புதன் ஹோரை:-** வதந்திகள் அனுப்பவும், எழுத்து வேலைகளுக்கும், பரீஷை எழுதவும், ஆராய்ச்சிகள் செய்யவும், வானொலித் தொடர்புகள் கொள்ளவும், புத்தகம் எழுதவும், வெளியிடவும் நன்று.

**குரு ஹோரை:-** எல்லாவற்றிற்கும் நலம். பணக்காரர் தயவை நாடுவது, எல்லாச் சாமான்களையும் வாங்குவது, உத்தியோகங்கள், பணவிஷய விவரங்களைத் தொடங்க, ஆடை ஆபரணங்கள் சேர்க்க, காரியங்கள் தடையின்றி நடக்கக் கடன்களைப் பெறுவது, ஷராப் வியாபாரிகளுக்கும் விவசாய லாபங்களுக்கும் இந்த ஹோரை மிகவும் சிறந்தது. விருந்துக்கு நல்லதல்ல.

**சுக்கிர ஹோரை:-** சுபவேலைகள் நடத்த, பெண்களைப்பற்றிப்பேச, இன்பக்கேளிக்கைகள், விவாகப்பேச்சு, பெண்களுடன் உரையாடல், பொன்னாபரணங்கள், வாகனங்கள் கொள்வனவு செய்தல் இன்பக்கலைகள் தொடங்குதல், சோடனை வேலைகள் ஆரம்பித்தல் முதலியனவற்றிற்கு சிறந்தது.

**சனி ஹோரை:-** இவ்வோரை மிகக் கொடியது. இருந்தபோதிலும் நிலங்கள், அவை சம்பந்தப்பட்ட சொத்துக்களைப்பற்றி நடவடிக்கை எடுக்க, தோம்பு துறவுகளைப்பற்றிப் பேசவும் நல்லது.

## (புரட்டாதி மாதம் 1-ந் தேதி முதல் 31-ந் தேதி வரை)

(சூரிய உதயம் 6 மணி 03 நிமிஷம்)

| வாரம் | 6...03 7...03 | 7...03 8...03 | 8...03 9...03 | 9...03 10...03 | 10...03 11...03 | 11...03 12...03 | 12...03 1...03 | 1...03 2...03 | 2...03 3...03 | 3...03 4...03 | 4...03 5...03 | 5...03 6...03 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **பகல்** | | | | | | | | | | | | |
| ஞாயி | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி |
| திங்க | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய |
| செவ் | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி |
| புதன் | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய. | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் |
| வியா | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் |
| வெள் | சுக்கி | புத்ன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு |
| சனி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி |
| **இரவு** | | | | | | | | | | | | |
| ஞாயி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் |
| திங்க | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு |
| செவ் | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி |
| புதன் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி |
| வியா | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய |
| வெள் | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி |
| சனி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் |

**குறிப்பு:-** நீங்கள் செய்யவேண்டிய கருமம் என்ன, எந்த ஹோரையில் செய்வது நலம் என்பதை மேலே உள்ள குறிப்புகளில் ஆராய்ந்து குறிப்பிட்ட ஹோரை வரும் நேரத்தைப் பதகத்தில் பார்த்து அந்தநேரத்தில் குறிப்பிட்ட கருமத்தைச் செய்யவும். நிச்சயம் அனுகூலமாகும்.

யாழ். வானியற் கழகம்
167, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

வெளியீடு இல. 50

# புரட்டாதி மாத வானியற் காட்சிகள்
# Astronomical Phenomena

16-9-84 — 16-10-84

சூரியன்: 16-9-84 பி. ப. மணி 1-44-ல் கன்னிராசிப் பிரவேசம்
16-9-84 உதயம் காலை 6-03 அஸ்தமனம் மாலை 6-07
16-10-84 உதயம் காலை 6-02 அஸ்தமனம் மாலை 5-51

சந்திரன்: 18-9-84 அபர அஷ்டமி பி. ப. 3-01
25-9-84 அமாவாசை காலை 8-41
26-9-84 சந்திர தரிசனம்
2-10-84 பூர்வ அஷ்டமி பி. ப. 3-45
9-10-84 பூரணை பி. இ. 5-29

### கிரகங்கள்:

புதன்: மாத ஆரம்பத்தில் உதயம் முன் கீழ் வானத்தில் 18 பாகை உயரத்தில் தோற்றிய இக்கிரகம் படிப்படியாக உயரத்திற் குறைந்து 26-9-84-ல் சூரியனைச் சமீபிப்பதால் அஸ்தமனமாகிவிடும். 27-9-84-ல் கன்னிராசியிலும் 14-10-84-ல் துலாராசியிலும் பிரவேசிக்கிறது.

சுக்கிரன்: மாத ஆரம்பத்தில் சூரியாஸ்தமனமானதும் மேற்குவானில் 25 பாகை உயரத்தில் மாலை வெள்ளியாகக் காட்சியளிக்கும் இக்கிரகம் மாதமுடிவில் 32 பாகை உயரத்திற் காணப்படும். 20-9-84-ல் துலாராசியிலும், 14-10-84-ல் விருச்சிகராசியிலும் பிரவேசிக்கிறது.

செவ்வாய்: மாத ஆரம்பத்தில் சூரியாஸ்தமனத்தின் மேல் உச்சிக்கு மேற்கே 6 பாகையிற் காணப்படுமிக்கிரகம் மாச முடிவில் உச்சிக்கு மேற்கே 15 பாகையிற்காணப்படும். 25-9-84-ல் தனுராசியிற் பிரவேசிக்கிறது.

வியாழன்: மாத ஆரம்பத்தில் சூரியாஸ்தமனமானதும் உச்சிக்கு கிழக்கே 11 பாகையிற் காணப்படுமிக்கிரகம் மாத முடிவில் உச்சிக்கு மேற்கே 13 பாகையிற் காணப்படும். 16-9-84-ல் தனுராசியில் மூலம் 4-ம் பாதத்திற் பிரவேசிக்கிறது.

சனி: மாத ஆரம்பத்தில் சூரியாஸ்தமனத்தின் மேல் உச்சிக்கு மேற்கே 40 பாகை சரிந்து காணப்படுமிக்கிரகம் மாதமுடிவில் மேற்கு அடிவானத்திலிருந்து 23 பாகை உயரத்திற் காணப்படும். 23-9-84-ல் விருச்சிக ராசியில் விசாகம் 1-ம் பாதத்திற் பிரவேசிக்கிறது.

இந்திரன் (Uranus): 29-9-84-ல் விருச்சிக ராசியில் கேட்டை 1-ம் பாதத்திற் பிரவேசிக்கிறது.

வருணன் (Neptune): தனுராசியில் மூலம் 2-ம் பாதத்திற் சஞ்சரிக்கின்றது.

குபேரன் (Pluto): துலாராசியில் சுவாதி 1-ம் பாதத்திற் சஞ்சரிக்கிறது.

### சமாகமாதிகள்

19-9-84 முன்னிரவு சந்திரனுக்குத் தெற்கு 3 பாகையில் சித்திரை நக்ஷத்திரம்.

22-9-84 சரத்விஷுவ சமராத்திரி தினம் (Autumnal Equinor).

27-9-84 உதயம் முன் சந்திரனுக்குத் தெற்கு சுக்கிரன் 2 பாகை. முதல் நாள் சந்திர தரிசனத்துடன் அவதானிக்கவும்.

28-9-84 அதிகாலை 3½ மணிக்கு சந்திரனால் சனி கிரகணமடையும். நியூசிலாந்து, தென்பசிபிக், அவுஸ்திரேலியாவில் பார்க்கமுடியும். முதல் நாள் முன்னிரவில் சந்திரன் சனியைச் சமீபித்திருப்பதை அவதானிக்கவும்.

1-10-84 சந்திரனால் செவ்வாய் கிரகணமடையும். தென்பசிபிக்கில் தெரியும். முதல் நாள் முன்னிரவில் செவ்வாயைச்சனி சமீபித்திருப்பதை அவதானிக்கலாம்.

1-10-84 முன்னிரவு சந்திரனுக்கு வடக்கு வியாழன் 3 பாகை முன்னிரவில் கவனிக்க.

8-10-84 நள்ளிரவு சுக்கிரனுக்குத் தெற்கு சனி 3 பாகை. முன்னிரவில் கவனிக்க.

14-10-84 உதயம்முன் வியாழனுக்குத் தெற்கில் செவ்வாய் 2 பாகை அஸ்தமனமானதும் அவதானிக்கவும்.

# "சோதிடம் கற்போம்"

ஞானி

## இரண்டாது பாவம் "தனம்"

இரண்டாவது பாவத்தின் பிரதான காரகம் தனமாகும். இப்பாவம் தனபாவம் எனக் கூறப் படும். இப்பாவத்தால் தனம், வாக்கு, குடும்பம், நேத்ரம், வித்தை, முகம் என்பன அறியலாம்.

ஒருவருடைய தனபலன் எப்படியிருக்குமென அறிவதற்கு இரண்டாம் பாவத்தின் பெலாபெலம் அறிய வேண்டும். சுபக்கிரகம் இருந்தால் அப் பாவம் பெலமடையும் என்பது பொதுவிதி. நவக்கிரகங்களுள் பூர்வபட்ச சந்திரன், புதன், வியாழன், சுக்கிரன் சுபர் எனப்படுவர், சூரியன் செவ்வாய், சனி, இராகு, கேது பாபக்கிரகங்கள் எனப்படும். அபரபக்கச் சந்திரன் பாபி. பாப ரோடு கூடிய புதனும் பாபி.

சுபாவ சுபக்கிரகங்களும் அசுப ஆதிபத்தியம் பெறின் அசுப பலனையே கொடுப்பர். பன்னிரு பாவங்களுள் 6, 8, 12 ஆகிய மூன்றும் அசுப பலனுக்குரியனவென்றும், 3-ம் பாவம் சுபாசுப பலனைக் கொடுக்கக் கூடியதென்றும், ஏனைய பாவங்கள் சுப பலனுக்குரியதென்றும் பொதுவாகக் கூறப்படும். இவ்வாறு 6, 8, 12 ஆகிய இடங்களின் அதிபர் அசுப பலனுக்குரியவரென்றும், மற்றைய பாவாதிபர்கள் நற்பலனுக்குரியவர்களென்றும், 3-ம் பாவாதிபன் சுபாசுப பலனுக்குரியவரென்றும் அறிதல் வேண்டும். 6, 8, 12 பாவாதிபர்கள் எங்கு நின்றாலும் அப்பாவம் பழுதடையும். ஆனல் 6, 8, 12க்குடையோர் இருந்த இராசியதிபர்கள் சுபத்துவமடையின் கஷ்டம் ஏற்படினும் தணிவாயிருக்குமெனவும், சுபத்துவமடையாவிட்டால் அதிக கஷ்டம் உண்டாகுமென்றும் கூறலாம்.


இலக்கினாதிபன் எந்தப் பாவத்தில் நின்றாலும்; அப்பாவத்தின் சுபத்துவம் அதிகரிக்கும். பாபக்கிரகம் நிற்குமிடங்களின் சுபத்துவம் பழுதடைய வேண்டியிருப்பினும் இவர் இலக்கினாதிபதியாதலின் சுபத்துவமே அதிகரிக்கும்.

ஆதிபத்திய பலன் இரண்டாம் பாவத்தில் வைத்து விளக்குவிதால் 2-ம் பாவத்துக்கு மட்டும் உரியதெனக் கொள்ளலாகாது. எல்லாப் பாவங்களுக்கும் இவ்வாறு கொள்ளலாம். உதாரணமாக இலக்கினத்தில் நின்றால் இலக்கினம் மிகப் பெலமடையும். 6, 8, 12-ம் அதிபர் இலக்கினத்தில் நின்றால், இலக்கினம் பெலமடையும் என்றவாறு.

இலக்கினாதிபன் இரண்டாம் பாவத்தில் நின்றால் சுயமுயற்சியால் தனஞ் சேரும் அல்லது பூமியால் பொருள் நட்டம் உண்டாகும். ஏனென்றால் பூமி நான்காம் பாவ காரகங்களுள் ஒன்றாதலினாலாகும். இவ்வாறே ஒவ்வொரு பாவத்தின் காரகமூலம் தன லாப நட்டங்களையறிதல் வேண்டும். இரண்டில் நிற்பவர் ஐந்தாதிபனாயின் புத்திரர் மூலமும், ஏழாதிபனாயின் களத்திர மூலமும் தன லாப நட்டம் சம்பவிக்கும். அட்டமாதிபன் 2-ல் பெலமடையின் உரிமையால் மட்டுமன்றிப் புதையல் மூலமும் பணம் சேரும். பெலவீனப்படில் ஏமாற்றுக்காரர் மூலம் பணம் அழியும். இரண்டில் நிற்பவர் ஒன்பதாதிபனாயின் பிதா மூலமும், பத்தாதிபனாயின் சொந்த முயற்சியாலும், பதினொராதிபனாயின் அதிஷ்டலாபச் சீட்டு போன்றவற்றாலும் பொருள் சேரும். பன்னிரண்டாதிபன் 2-ல் நிற்கில் வீண் காரியங்களில் பொருள் செலவாகும். (வளரும்)

**முக்கிய குறிப்பு:**

"சோதிடமலரில்" வெளியாகும் கட்டுரைகளில் வரும் கருத்துக்கள் கட்டுரையாளரின் சொந்தக் கருத்துக்களேயாகும். கட்டுரையாளர்களின் கருத்து வேறுபாடுகளுக்கு ஆசிரியர் பொறுப்பாளியல்லர்.



# இம்மாதம் உங்களுக்கு எப்படி

**டாக்டர் பண்டிற் கே. என். நவரத்தினம் A. F. A.**

**16-9-84 முதல் 16-10-84 வரை**

பின்வரும் இராசிப்பலன்கள் இம்மாதக் கிரகசாரத்தை யொட்டியே தரப்பட்டிருக்கின்றன. ஒரு சாதகரின் பலன்கள் அவரின் நட்சத்திர உடுதசா நிர்ணயத்தை ஒட்டியே ஏறக்குறைய முக்கால் பங்கு அமையும். கிரகசார பலன் கால் பங்கு வீதமே கிட்டத்தட்ட ஒரு வரைப் பாதிக்கும். இதை மனதில் வைத்து பின்வரும் பலன்களை வாசித்துப் பயன் பெறவும். இங்கு இராசி என்று குறிப்பிடுவது ஜனன காலத்தில் சந்திரன் இருந்த இராசியேயாகும்.



## மேடம்

அசுவினி, பரணி, கார்த்திகை 1-ம் கால்

மேடராசியினர்க்கு சூரியபகவான் இரஜத மூர்த்தியாக 6-ம் இடத்தில் சஞ்சரிக்கின்றார். மூர்த்திபலம் நன்றாயிருப்பினும் ஸ்தான பலம் குன்றுவதால் தேகசுகம் குறையும். 7-ல் சனி சஞ்சரிப்பது குடும்பசுகம் திருப்தியளிக்காது. செப்டெம்பர் 25 திகதி வரை அட்டமராசிச் செவ்வாய் விபத்துக்களையும், வெளியாருடன் தொல்லைகளையும் தரும். நிதிநிலைமை சுமாராக இருக்கும். இனத்தவர்களுடன் பிரச்சினைகள் ஏற்படலாகும். எனினும் வியாழனின் திரிகோண பார்வையால் யாவற்றையும் சமாளித்துக்கொள்ள முடியும்.

குடும்பஸ்தர்கட்கு வருவாய்க்கு மிஞ்சிய செலவுகள் உண்டாகும், களத்திர தொல்லைகள் மனத்தை வாட்டும். புத்திரசுகம் உண்டு; கடன் தொல்லைகள் குறையும்.

வியாபாரிகட்கு சுக்கிரன், புதன் ஆகியோரின் நிலை நன்றாயிருப்பது வியாபாரத்துக்கு முன்னேற்றமுண்டாகும். ஆடம்பரப் பொருட்களுடன் சம்பந்தப்பட்ட வியாபாரிமார் கூடிய நன்மை அடைவர், கறுப்புச்சந்தை வியாபாரமும் லாபம் தரக்கூடியது.

உத்தியோகத்தர்கட்கு சூரியன் ஸ்தானபலம் குறைந்திருப்பதால் வேலைப்பளு அதிகரிக்கும். சக உத்தியோகத்தருடன் மனவேறுபாடுகளுக்கு இடம்கொடாது நடத்தல் நல்லது. வசதி குறைந்த இடமாற்றத்தையும் சமாளிக்கவேண்டி இருக்கும்.

விவசாயிகட்கு விவசாயி சனி உச்சம் பெற்று 7-ம் இடத்தில் சஞ்சரிப்பதால் சிறந்த லாபம் கிடைக்க இடமுண்டு. விவசாயம் மென்மேலும் விருத்தியடையும். திடீர் லாபங்களையும் எதிர்நோக்கலாம்.


தொழிலாளர்கட்கு பலவகையிலும் முன்னேற்றமான பலன்கள் தென்படுகின்றன. சகதொழிலாளருடன் ஒத்துழைத்து நடக்க உகந்தகாலம். வருவாயும், லாபமும் அதிகரிக்க இடமுண்டு.

மாணவர்கட்கு கல்வித்துறையில் ஊக்கம் நன்கு இருப்பினும் விடாமுயற்சி அவசியம். பரீட்சைகளில் சித்தி, பாராட்டு என்பனவும் கிட்டும். வெளிநாட்டுக் கல்வி கற்போரும் நன்மை அடைவர்.

பெண்கட்கு சுக்கிரன் ஆட்சிப்பெற்றிருப்பது காதலில் உச்சக்கட்டத்தை ஏற்படுத்தும். எனினும் திருமணம் கைகூட வழியிருக்காது. குடும்பப் பெண்கள் மகிழ்ச்சியடைவர்.

அதிஷ்ட நாட்கள்: செப் 16, 17. 18 மு. ப.
22 இரவு 23, 24 பகல் 30 பி. இ.
அக் 1,2,5 இரவு 6,7 பகல் 15,16.

துரதிஷ்ட ,, செப் 24 இரவு 25, 26 பகல்,
28 இரவு, 29, 30 பகல்
அக் 8, 9, 10 பகல்.



## இடபம்

**கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிடம் 1,2-ம் கால்**

இடபராசியினர்க்கு சூரியன் சுவர்ணமூர்த்தியாக 5-ல் பவனி வருவது மிகவும் நன்று. பொருளாதாரம் சிறப்புற இருக்கும். குடும்பசுகம், தேகசுகம் குறைவு படாது. உற்றார், உறவினர், நண்பர்களுடன் அந்நியோன்யம் அதிகரிக்கும். வியாழன் அட்டமத்தில் சஞ்சரித்தாலும் பாதிப்பெதுவும் சொல்லக்கூடியதாக இல்லை. 7-ல் செவ்வாய் பொதுஜனங்களுடன் சண்டை சச்சரவுகளை ஏற்படுத்தினாலும் வெற்றிகரமாக முடியும்.

குடும்பஸ்தர்கட்கு மகிழ்ச்சிகரமான மாதம். குடும்பஸ்தானாதிபதி 4-லும், பின்னர் 5-லும் சஞ்சரிப்பது பலவகையிலும் சிறப்பைக் கொடுக்கும். பணவருவாய் நன்றாக இருக்கும். புத்திரராலும் நன்மைகள் கிட்டும்.

வியாபாரிகட்கு இலாபகரமான மாதமாகும். ஏற்றுமதி, இறக்குமதி வியாபாரம் செய்வோர் கணிசமான இலாபமடைவர். பண முதலீடுகளை முதலிடுவதில் பிரச்சினையேற்படாது.

உத்தியோகத்தர்கட்கு அரச உதவிகள் எதிர்பார்த்த வண்ணம் அமையும். பதவியுயர்வுகள், நன்மாற்றங்கள் என்பன எண்ணம்போல் கைகூடும். பொதுஜன மத்தியில் நல்ல அபிப்பிராயம் உண்டாகும்.

விவசாயிகட்கு விவசாய விருத்தியுண்டாகும். தோட்டச் செய்கைகள் நல்ல இலாபத்தைக் கொடுக்கும். பண்படுத்தல், விதைப்பு முதலியன நன்கு அமையும். சூரியன் மூர்த்தி பலமடைந்திருப்பதால் தானிய வகைகளின் விளைச்சல் நன்றாக இருக்கும்.

தொழிலாளர்கட்கு தொழில் விருத்தி உண்டாகும். புதுத்தொழில்கள் ஆரம்பிக்கவும் நன்று. முதலாளிகளின் ஒத்துழைப்புக் கிடைக்கும். சக தொழிலாளருடன் ஒற்றுமை இருக்கும்.

மாணவர்கட்கு கல்வியில் நாட்டம் அதிகரிக்கும். ஞாபகசக்தி நன்றாக இருப்பதால் பரீட்சைகளில் சித்தியும், பாராட்டுக்களும் கிட்டும். நேர்முகப் பரீட்சைகளும் நன்மையளிக்கும்.

பெண்களுக்கு 7-ல் செவ்வாய் விவாக விடயங்களில் சிக்கலை ஏற்படுத்தினாலும் வெற்றியில் முடிவடையும். காதல் விவகாரங்களில் ஈடுபட்டோர் கூடிய நன்மையடைவர்.

அதிஷ்டநாட்கள்: செப் 16, 18, 20, 24,
அக் 3, 8, 13, 15.

துரதிஷ்ட நாட்கள்: செப் 26, 27, 30,
அக் 1, 2, 10, 11, 12.



## மிதுனம்

**மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3.**

இவ்விராசியினர்க்கு சூரியன் லோகமூர்த்தியாக 4-ல் சஞ்சரிக்கின்றார். ஸ்தானபலமடைந்திருப்பினும் மூர்த்திபலம் குன்றி இருப்பதால் மனக்கஷ்டம், பணக்கஷ்டம் என்பன அதிகரிக்கும். சேர்ந்தவர்களால் தீமையும், பகைமையும் உண்டாகும். 7-ல் வியாழன் இருப்பதால் பொதுஜன மத்தியில் செல்வாக்கு மிகும். குடும்பசுகம், தேகசுகம் என்பன பாதிப்படையும். சுற்றாடலில் அமைதி இருக்காது.

குடும்பஸ்தர்கட்கு 5-ல் சனி புத்திரரால் முன்னேற்றத்தைத் தடைபண்ணுவர். குடும்பத்தில் வெறுப்பும், சண்டையும் உண்டாகும். நற்காரியங்கள் நடைபெற இடமில்லை.

வியாபாரிகட்கு செட்டி புதன் சூரியனுடன் சேர்ந்து 4-ல் இருப்பதால் வியாபாரத்தில் குறை வேற்படாது. எனினும் திருப்திகரமான முன்னேற்றத்தை எதிர்பார்க்க முடியாது. கள்ள மார்க்கட் வியாபாரம் நட்டத்தைக் கொடுக்கும்.

உத்தியோகத்தர்கட்கு சிறப்பு இருக்காது. சக உத்தியோகத்தருடன் திடீர் வாக்குவாதங்கள், மோதல்கள் என்பன உண்டாகும். மேலதிகாரிகளுடன் வெறுப்புக்காளாக வேண்டியும் நேரிடலாம். கடன் தொல்லைகளும் இருக்கவே செய்யும்.

விவசாயிகட்கு நன்மைகள் ஏற்பட இடமில்லை. 5-ல் சனி விவசாய முன்னேற்றத்தைக் குன்றச் செய்யும். அரசமானிய உதவிகள் கிடைப்பதற்கு வழியில்லை. வழக்கு விசாரணைகள் தோல்வியையே கொடுக்கும்.

தொழிலாளர்கட்கு 5-ல் தொழிலாளி சனி நிம்மதியைக் குலைக்கும். தொழில் விருத்தி குன்றும். சகதொழிலாளர் முக்கிய சந்தர்ப்பங்களில் காலை வாரிவிடுவர். முதலாளிகளின் அனுசரணையும் கிடைக்காது. புதுத்தொழில்கள் ஆரம்பித்தலையும் தவிர்க்கவும்.

மாணவர்கட்கு கூடிய ஊக்கம் வேண்டும். பரீட்சைகளில் மறதி, தேகசுகக்குறைவு என்பவற்றால் சித்தி கிட்டாது. கல்வியூட்டுவதில் உதவி புரிவோர் காலைவாரி விடுவர். எனினும் மனஞ்சோராது விடாமுயற்சியுடன் ஈடுபடல் நன்று.

பெண்கட்கு நினைத்த காரியம் கைகூடாது. காதல் விவகாரங்கள் தோல்வியைக் கொடுக்கும். பிறரின் பழிச்சொல்லுக்கு ஆளாக நேரிடலாம். கன்னிப்பெண்கள் மாதவிடாய், ஜீரணக்கோளாறு போன்றவற்றால் அவஸ்தைப் படுவர்.

அதிஷ்ட நாட்கள்: செப் 18, 19, 20, 21, 22, 26, 27, அக் 5, 6, 10, 11, 12.
துரதிஷ்ட நாட்கள்: செப்28, 29,
அக் 3, 4, 10, 11, 12.



# கடகம்

புனர்பூசம் 4-ம் கால், பூசம், ஆயிலியம்

இந்தராசியில் ஜனித்தவர்களுக்கு சூரியன் சுவர்ணமூர்த்தியாக 3-ம் ராசியில் சஞ்சரிப்பது நன்று. எண்ணிய கருமங்கள் எண்ணியாங்கு கைகூடும். 6-ல் வியாழன் ஆரோக்கியத்தைக் குன்றச் செய்யினும், சூரியனின் மூர்த்திபலத்தால் முன்னேற்றமடையும். சுற்றுடலில் அமைதி நிலவும். கொடுக்கல் வாங்கல் விஷயங்கள் திருப்திகரமாக இருக்கும். வெளிநாட்டுப் பயணங்களில் முன்னேற்றம் உண்டாகும்.

குடும்பஸ்தர்கட்கு இல்வாழ்க்கை சிறப்புற அமையும். களத்திர வழியில் முன்னேற்றம் கிடைக்கும். 5-ல் செவ்வாய், கேது இருப்பது புத்திரரால் சஞ்சலத்தைக் காட்டுகின்றது. பெரியோர் உதவி கிட்டும்.

வியாபாரிகட்கு வங்கி உதவிகள் கிட்டும். செட்டி புதன் நற்சஞ்சாரம் செய்வது வியாபார விருத்திக்கு ஏற்றகாலமாகும். ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகம் நன்கு அமையும்.

உத்தியோகத்தர்கட்கு அரச உதவிகள் கிடைக்கும். தொழில் மேன்மை உண்டாகும். சக தொழிலாளருடன் சந்தோஷகரமாக நடக்க கிரகங்கள் வழிவகுக்கின்றன. மேலதிகாரிகளின் பாராட்டுதல்கள் கிடைக்கப் பெறும்.

விவசாயிகட்கு கமச்செய்கை விருத்தியடையும். அரசாங்க உதவிகளும் கிடைக்கலாகும். தானிய விதைப்புகளை தடையின்றி மேற்கொள்ளலாம். வழக்கு விசாரணைகளில் தீர்வு உண்டாகும்.

தொழிலாளர்கட்கு தொழில் விருத்தி கிட்டும். புதுத்தொழில்கள் ஆரம்பிக்க உகந்த காலம். சகதொழிலாளருடன் ஒற்றுமை உண்டாகும். முதலாளிமாரின் பாராட்டுதல்களும் உண்டாகும். தொழில் லாபங்களும் கிடைக்கும்.

மாணவர்கட்கு கல்விக்கு முன்னேற்றமான காலமாகும். ஞாபகசக்தி நன்றாயிருப்பதால் பரீட்சைகளில் சித்தியும், பாராட்டுதல்களும் கிடைக்கப் பெறும்.

பெண்கட்கு காதல் விடயங்களில் களிப்பான மாதமாகும். நினைத்த காரியங்கள் தெள்ளிதிற் கைகூடும். குடும்பப்பெண்கள் கணவனின் பாராட்டைப் பெறுவர்.

அதிஷ்ட நாட்கள்: செப் 20 பி. ப. 21, 24 பி. ப, 25, 28 பி, ப. 29
அக் 8, 9, 13, 14,
துரதிஷ்ட ,, செப் 30 பி. இ.
அக் 1, 2, 5 பி.ப. 6,7, 15 பி. ப. 16.



## சிங்கம்

மகம், பூரம், உத்தரம் 1-ம் கால்

சிங்கராசியில் ஜனித்தவர்களுக்கு சூரியன் தாம்ரமூர்த்தியாக 2-ல் சஞ்சரிக்கின்றார். மூர்த்தி பலம் குன்றியிருப்பினும் ஸ்தானபலம் பெற்றுள்ளதால் சுமாரான பலன்களை அனுபவிப்பர். நிதி நிலை நன்றாக இருக்கும். ஆரோக்கியம் குன்றும். 3-ல் சனி சுற்றாடலிலும், இனத்தவருடனும் நல்லுறவை வலுப்படுத்த உதவும். 5-ல் வியாழன் எக்காரியத்தையும் மனத்துணிவுடன் நிறைவேற்ற வழி வகுக்கும். மாதுரு வழியால் நற்பலன்கள் குறைந்து காணப்படும்.

குடும்பஸ்தர்கட்கு சூரியன் 2-ல் இருப்பதால் குடும்ப அமைதி பேணப்படும். புத்திரரால் நன்மையும் உதவியும் கிடைக்கும். கணவன் மனைவியரிடையே நல்லுறவு உண்டாகும். புத்திரோற்பத்திக்கும் இடமுண்டு.

வியாபாரிகட்கு செட்டி புதன் நற்சஞ்சாரம் செய்வதால் வியாபாரம் முன்னேற்றமடையும். வங்கி வசதிகளில் சிக்கல்கள் ஏற்படினும் தனகாரகனின் சஞ்சாரத்தால் சமாளிக்கக்கூடியதாக இருக்கும்.

உத்தியோகத்தர்கட்கு சூரியன் 2-ல் இருப்பது தொழில் பிரச்சினைகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளும். சக தொழிலாளருடன் மனவேதனை ஏற்படாமல் நடந்து கொள்ள வேண்டும்.

விவசாயிகட்கு 3-ல் சனி உச்சம் பெற்றிருப்பதால் விவசாய விருத்தி உண்டாகும். தானிய விதைப்பு [illegible] நற்பலனையளிக்க மாட்டாது.

தொழிலாளர்கட்கு தொழில்விருத்தி குன்றும். சகதொழிலாளரின் ஒத்துழைப்புக் கிடைக்க மாட்டாது. முதலாளிகளின் பழிச்சொல்லுக்கு ஆளாக வேண்டி நேரிடலாம். புதுத்தொழில்கள் ஆரம்பிப்பதை பொறுத்துச் செய்வது நலம்.

மாணவர்கட்கு 2-ல் சூரியன் இருப்பதும், புதன், குரு என்பனவற்றின் சஞ்சாரங்களும் கல்வி விருத்தியைக் கொடுக்கும். பரீட்சைகளில் சித்தியும், பாராட்டுக்களும் கிடைக்க ஏதுவாகும். வெளிநாட்டுக் கல்வி கற்போருக்கு கஷ்ட பலன்கள் உண்டாகும்.

பெண்களுக்கு கண்டதும் காதல் கொள்ளச் செய்யும். முகவசீகர ஆண்களை எதிர்நோக்கியதும் மனக்கட்டுப்பாட்டுடன் நடக்க முயற்சிக்க வேண்டும். குடும்பப் பெண்கள் சிறப்பான பலன்களைப் பெறுவர்.

அதிஷ்ட நாட்கள்: செப் 22 பி.ப, 23, 26 பி. ப, 27, 30 பி. இ.
துரதிஷ்ட நாட்கள்: அக் 3, 4, 8, 9, செப் 20, 21.



## கன்னி

உத்தரம் 2, 3, 4 அத்தம், சித்திரை 1, 2 கால்

இவர்களுக்கு சூரியன் இரஜதமூர்த்தியாக ஜன்ம ராசியில் பவனிவருகின்றார். அத்துடன் ஏழரைச்சனியின் கடைக்கூறும் நடைபெறுகின்றது. தொடர்ந்தும் கஷ்டபலன்களை அனுபவிக்க வேண்டி நேரிடும். 3-ல் செவ்வாயின் அயலவர்களுடன் பகைமையை வளர்க்கும். 4-ல் வியாழன் சஞ்சரிப்பது பிரச்சினைகளை சாவதானமாக தீர்க்க உதவியளிக்கும். ஆரோக்கியம் பாதிப்படையும். பண நிலை மேலும் மோசமடையக் கூடும்.

குடும்பஸ்தர்கட்கு 2-ல் சனி இல்வாழ்க்கையில் தடைகளை ஏற்படுத்தும். வருமானங்கள் கைக்கு வந்து சேருவதில் கஷ்டமேற்படலாம். புத்திரராலும் முன்னேற்றம் கிடைக்க வழியில்லை.

வியாபாரிகட்கு வங்கியை எதிர்பார்த்து ஏமாற்றமடைய வேண்டி நேரிடலாம். புதிய முதலீடுகள் விரும்பத்தக்கதல்ல. வியாபாரம் மந்த நிலையிலேயே நடக்கும்.

உத்தியோகத்தர்கட்கு ஜன்மராசிச் சூரியன் சக தொழிலாளருடன் பகைமையை வளர்ப்பார். சுக்கிரனின் நற்சஞ்சாரத்தால் மேலதிகாரிகளுடன் தந்திரமாக நடந்துகொள்வீர்கள்.

விவசாயிகட்கு கமச்செய்கை எவ்வித விருத்தியையும் கொடுப்பதாக இல்லை. தானியவிதைப்பு முதலியன நற்பலனைக் கொடுக்கமாட்டாது. தானிய விற்பனவும் பலனளிக்காது.

தொழிலாளர்கட்கு தொழில் விருத்தி குன்றும். ஆரம்பித்த தொழில்கள் இழுபறி நிலையிலிருக்கும். தொழிலகத்தில் அமைதி நிலவ 4-ல் வியாழன் வழிவகுப்பார். எதற்கும் மனக்கட்டுப்பாட்டுடன் நடப்பது நன்று.

மாணவர்கட்கு கல்வி முன்னேற்றம் தடைப்படும். ஏழரைச்சனி கல்வியில் நாட்டமுண்டாக விடாது. 4-ல் வியாழனுல் சிறிதளவு பலனுண்டு. மனச்சோர்வடையாமல் துணிவுடன் கல்விகற்பது அவசியம்.

பெண்களுக்கு விவாக விடயங்கள் மந்த நிலையிலேயே இருக்கும். கன்னிப்பெண்கள் காதலில் ஈடுபட்டு தமது கௌரவத்தைப் பாதித்துக் கொள்வார். குடும்பப் பெண்கள் கணவரின் வெறுப்புக்குள்ளாகுவார்.

அதிஷ்ட நாட்கள்' செப் 20, 21, 24 பி. ப. 25, 28பி. ப, அக் 3, 4 13, 14.
துரதிஷ்ட ,, செப் 22 பி. ப., 23
அக் 5 பி. ப. 6, 7, 10 பி. ப. 11, 12.




சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3.

துலாராசியினர்க்கு சூரியன் தாம்ர மூர்த்தியாக 12-ல் சஞ்சாரம் செய்வதும் ஏழரைச்சனியின் நடுக்கூறும், பலவிதத்திலும் கஷ்ட பலன்களையே கொடுக்கும். ஆரோக்கியம் பாதிக்கப்படும். ஜன்ம ராசிச் சனி சடும் உழைப்பைக் கொடுத்தும் அதற்கேற்ற பலனைத் தர விடாது. அரசாங்க உதவிகள் கிடைக்காது. இராகு 8-ல் சஞ்சரிப்பதால் பொதுஜனங்கள் மத்தியில் எதிர்ப்புக்கள் தோன்றும்.

குடும்பஸ்தர்கட்கு செவ்வாய், கேது, யுரேனஸ் என்பவற்றின் சஞ்சாரம் மேலும் கஷ்டத்தைக் கொடுக்கும். புத்திரரால் நற்பலன் கிடைக்க மாட்டாது. நிதிநிலையும் பாதிக்கப்படும்.

வியாபாரிகட்கு முதலீடுகள் பலனளிக்காது. கள்ள மார்க்கட் வியாபாரம் நற்பலன் தராது. வங்கிநிலையும் திருப்தியளிக்காது. அழகுசாதனப் பொருட்களுடன் சம்பந்தப்பட்ட வியாபாரம் செய்வோர் சிறிது நன்மை காண்பர்.

உத்தியோகத்தர்கட்கு ஏமாற்றமான மாதமாகும். சக தொழிலாளருடன் பிரச்சினை ஏற்படவண்ணம் இருக்கும். மேலதிகாரிகளின் வெறுப்புக்காளாக வேண்டி நேரிடலாம்.

விவசாயிகட்கு விவசாயி சனி ஜன்மத்தில் சஞ்சரிப்பது நன்றல்ல. விதைப்பு முதலியன நற்பலன் தராது. தானியச் செய்கைக்கு சூரியனின் பலம் குன்றியிருப்பது ஏதுவாக இல்லை.

தொழிலாளர்கட்கு வேலைப்பளு அதிகமாகும். அரச உதவிகள் கிடைக்காது. முயற்சிக்கேற்ற பலன் கிடைப்பது அரிது. முதலாளிமாருடன் சச்சரவுகள் ஏற்பட இடமுண்டு.

மானவர்கட்கு கல்வியில் நாட்டமிராது. காதல் தொடர்புகளால் கல்விநிலை பாதிக்கப்படும். பரீட்சைகளில் சித்தி கிட்டுவது கஷ்டம். புலமைப் பரிசில் என்பன கிடையாது ஏமாற்றம் அடைய நேரிடலாம்.

பெண்கட்கு களிப்பான மாதமாகும். காதல் தொடர்புகளில் ஈடுபாடு அதிகமாயினும் கைகூடுவதில் சிக்கல்கள் தோன்றக்கூடும். கணவன்மாருடன் சண்டை, சச்சரவு ஏற்படலாகும்.

அதிஷ்ட நாட்கள்: செப் 18, 19, 22 பி. ப, 23, 26பி. ப, 27, 30 பி. இ. அக் 1, 2, 5 பி. ப, 6, 7, 15 பி. ப, 16.
துரதிஷ்ட நாட்கள்: செப் 24, 25, அக் 8, 9, 13, 14




விசாகம் 4-ம் கால் அனுஷம், கேட்டை

விருச்சிகராசியில் ஜனனமானவர்களுக்கு சூரியன் தாமர மூர்த்தியாக 11-ம் ராசியில் பவனி வருகின்றுர். சூரிய பகவான் ஸ்தான பல மடைந்திருப்பினும் மூர்த்திபலம் குன்றியிருப்பதால் நற்பலன்களை அதிகம் எதிர்பார்க்க முடியாது. ஜன்மத்தில் செவ்வாயின் சஞ்சாரம் முற்கோபத்தை

உண்டாக்கும். 2-ல் வியாழன் இருப்பது மன மகிழ்வைத் தரும். நிதி நிலைமை சுமாராக இருக்கும். 12-ல் சனி காரியங்களைச் சுமுகமாக நடக்கவிடாது தடுக்கப்பார்க்கும்.

குடும்பஸ்தர்கட்கு குடும்பஸ்தானாதிபதி நல்ல நிலையிலிருப்பினும், ஏழரைச்சனியின் தாக்கமும், சூரியன் மூர்த்தி பலமிழந்த நிலையிலிருப்பதும் சுமுகநிலையைத் தோற்றுவிக்காது. புத்திரசுகம் பாதிக்கப்படும். புத்திரரால் உதவிகள் கிட்டாது.

வியாபாரிகட்கு வியாபாரம் மந்தகதியிலேயே நடக்கும். வங்கி உதவிகள் உரிய நேரத்தில் கிடைக்காது போகலாம். அழகுசாதனப் பொருட்களுடன் சம்பந்தப்பட்ட வியாபாரம் சிறு நன்மையளிக்கும்.

உத்தியோகத்தர்கட்கு தொழில் சிறப்புற நடப்பினும் மனநிம்மதி இருக்காது. சக தொழிலாளரால் பாதிப்புக்கள் ஏற்பட வழிகள் உண்டாகும். மேலதிகாரிகளுடன் பொறுமையுடன் நடந்துகொள்வது நன்மையளிக்கும்.

விவசாயிகட்கு விவசாயி சனி 12-ல் சஞ்சரிப்பது கஷ்ட பலனையே கொடுக்கும். தானிய விதைப்பு முதலியன மேற்கொள்வதும் நன்றல்ல. எதிர்பார்த்த விளைச்சல் கிடைக்காது போகலாம்.

தொழிலாளர்கட்கு பிரச்சினை மலிவு பொலிவாக இருக்கும். முதலாளிமாருடன் வாக்குவாதங்கள் உண்டாகும். சக தொழிலாளருடன் ஒற்றுமைப்பட்டு நடந்தால் நன்மையுண்டு. நிதி நிலைமையும் பாதிப்புக்குள்ளாகலாம்.

மாணவர்கட்கு கல்வியில் முன்னேற்றம் கிட்டாது. ஜன்மச் செவ்வாய் அவசரப்பட்டு புத்தி தடுமாறச் செய்யும். பரீட்சைகளிலும் எதிர்பார்த்த பெறுபேறுகளைப் பெற முடியாது போகலாம்.

பெண்களுக்கு விவாகப் பேச்சுக்கள் இழுபறி நிலையிலேயே இருக்கும். காதலர்கட்கு காதல் முயற்சிகள் தடை தாமதங்களை ஏற்படுத்தும். தொழில் பார்க்கும் பெண்கள் சிறு நன்மையடைவர்.

அதிஷ்ட நாட்கள்: செப் 20 பி. ப. 21, 24 பி.ப, 25, 28 பி.ப, 29
அக் 3, 4, 8, 9.

துரதிஷ்ட நாட்கள்: செப் 18, 19, 26, 27,
அக் 10 பி.ப, 11, 12, 15பி.ப, 16



# தனுசு

மூலம், பூராடம், உத்தராடம் 1-ம் கால்

இவர்களுக்கு சூரியன் சுவர்ண மூர்த்தியாக 10-ம் ராசியில் பவனி வருவது சிறப்பாகும். பண விடயத்தில் தனஸ்தானாதிபதி 11-ல் உச்சம் பெறுவது முன்னேற்றம் உண்டாகும். வரவேண்டிய பணத்தொகைகள் கைக்கு வந்து சேரும். 6-ல் ராகு இடையிடையே சருமவியாதிகளைக் கொடுக்கும். வியாழன் ஜன்மத்தில் சஞ்சரித்தாலும் பலம் பெற்றிருப்பதால் பாதிப்புகள் ஏற்பட இடமில்லை. மனச்சந்தோஷம் அதிகரிக்கும்.

குடும்பஸ்தர்கட்கு குடும்ப உறவுகள் மிகவும் சந்தோஷகரமாக இருக்கும். களத்திரத்துடன் ஒற்றுமையாக இருப்பீர்கள். புத்திரகாரகன் 12-ல் சஞ்சரிப்பது புத்திரரால் நன்மைகளை அடைய விடாது.

வியாபாரிகட்கு வியாபாரம் சிறப்புற நடக்கும். கறுப்புச்சந்தை வியாபாரம் கூடிய நன்மையளிக்கும். செட்டி புதன் நற்சஞ்சாரம் செய்வது பலவிதத்திலும் அனுகூலமாகவே தோன்றுகின்றது. புதிய முதலீடுகளை ஆரம்பிக்கலாம்.

உத்தியோகத்தர்கட்கு சூரியபகவான் மூர்த்தி பலமடைந்து 10-ல் சஞ்சரிப்பது தொழிலில் முன்னேற்றம் உண்டாகும். வசதியான இடமாற்றங்கள் கிட்டும். மேலதிகாரிகளின் நன்மதிப்பும் பாராட்டுதல்களும் கிடைக்கலாகும்.

விவசாயிகட்கு விவசாயி நற்சஞ்சாரம் செய்வது அதிக விளைச்சலையும், வருவாயையும் கொடுக்கும். தானிய விதைப்பு முதலியன நன்கு நடைபெறும். பயிர்ச்செய்கை முதலியன நன்கு நடைபெற்று நல்ல இலாபத்தைத் தரும்.

தொழிலாளர்கட்கு சனி 11-ல் உச்சமடைவது நற்பலனுக்குரியதாகும். அரச ஒப்பந்தங்கள் நற்பலனைக் கொடுக்கும். முதலாளிமாரின் நற்பெயர் கிடைக்கும். கூட்டுறவில் ஒற்றுமை வலுக்கும். நிதி நிலைமைகளும் நன்மை தரும்.

மாணவர்கட்கு புத்திக்கூர்மை இருக்கும். கல்வியில் நாட்டமும், அக்கறையும் மிகும். சட்டம், வர்த்தகம், பொறியியல் சம்பந்தப்பட்ட கல்வி கற்போர் சிறப்பான பலன் பெறுவர். பரீட்சைகளில் சித்தி கிட்டும்.

பெண்களுக்கு விவாக விடயங்கள் முன்னேற்றத்தைத் தரும். காதலில் ஈடுபட்டுள்ள பெண்கள் களிப்புறுவர். குடும்பப் பெண்களுக்கும் நற்பலனுக்குரிய மாதமாகும்.

அதிஷ்ட நாட்கள்: செப் 22 பி.ப, 23, 28 பி.ப, 29; 30 பி. இ, அக் 1, 2, 5 பி.ப, 6, 7 10 பி. ப, 11, 12.

துரதிஷ்ட நாட்கள்: செ 20 பி;ப, 21, 28 பி.ப,29 அக் 13, 14.




உத்தராடம் 2, 3, 4 திருவோணம், அவிட்டம் 1, 2

இவர்களுக்கு சூரியபகவான் இராஜதமூர்த்தியாக 9-ம் ராசியில் பவனிவருவதால் கடந்தமாதம் ஏற்பட்ட சொல்லொணுக் கஷ்டங்கள் குறையலாகும். சனி 10-ல் உச்சம் பெறுவதால் அந்தஸ்து உயரும். 9–ல் சூரியன், புதனின் சஞ்சாரத்தால் வெளிநாட்டு விவகாரங்களில் அனுகூலமான பலன்கள் உண்டாகும். நிதிநிலை சுமாராக இருக்கும். குடும்பசுகம், தேகசுகம் என்பன சிறப்படையும். பொது ஜனமத்தியில் நல்லபிப்பிராயம் இருக்கும்.

குடும்பஸ்தர்கட்கு குடும்பசுகம் திருப்தியளிக்கும். இனசன கொண்டாட்டங்களுக்கு நன்று. 3-ல் ராகு சஞ்சரிப்பதால் புத்திரசுகம் பாதிப்படையும். புத்திரரால் உதவிகள் கிடைக்க மாட்டாது.

வியாபாரிகட்கு வியாபாரம் சுமாராக நடக்கும். புதனின் சஞ்சாரம் நன்ருக இருப்பதால் புதிய முதலீடுகள் ஆரம்பிக்க உகந்தது. அரசாங்க உதவிகள் கிட்டும். ஆடம்பரப் பொருட்கள் சம்பந்தமான வியாபாரம் லாபம் தரும்.

உத்தியோகத்தர்கட்கு 9-ல் சூரியன் இருப்பதால் அரசாங்க புலமைப்பரிசில் கிடைக்கப் பெற்று வெளிநாடு செல்லும் வாய்ப்புகள் உண்டாகலாம். கடந்த மாதம் ஏற்பட்ட கஷ்டங்களுக்கு இம்மாதம் மிக நிம்மதியாக இருக்கும்.

விவசாயிகட்கு விவசாயி சனி 10-ல் உச்சம் பெறுவது நன்று. பயிர்ச்செய்கை தோட்டச்செய்கை முதலியன விருத்தியாகும். தானிய விதைப்பு முதலியனவும் நற்பலனைத் தரும்.

தொழிலாளர்கட்கு தொழிலில் பிரச்சினைகள் ஏற்படாமல் சிறப்புற நடக்கும். அரசாங்க உதவிகள் கிடைக்கும். தொழில் மாற்றங்களும் உண்டாகலாம். இரும்புத் தொழில் செய்வோர் நல்ல லாபமடைவர்.

மாணவர்கட்கு கல்வியில் அக்கறை உண்டாகும். வெளிநாட்டுக் கல்வி வாய்ப்புக்களுக்கும் இடமுண்டு. பரீட்சைகளில் சித்தி கிடைக்க விடாமுயற்சி வேண்டும். பொறியியல் துறை மாணவர் முன்னேற்றமடைவர்.

பெண்கட்கு காதல் கிளர்ச்சிகள் உள்ளத்தைக் கிளறிக்கொண்டிருக்கும். குடும்பப் பெண்கள் கணவனின் அன்பையும், ஆதரவையும் நன்கு பெறுவர். விவாக வாய்ப்புகள் குறைவாகவே தென்படுகின்றது.

அதிஷ்ட நாட்கள்: செப் 24 பி.ப, 25, 28 பி,ப,29 அக் 3, 4, 8, 9, 13, 14.

துரதிஷ்ட நாட்கள்: செப் 18, 19, 22 பி.ப, 23, 30 பி.இ, அக் 1,2,15பி.ப, 16.




அவிட்டம் 3, 4, சதயம், பூரட்டாதி 1, 2, 3-ம் கால்.

கும்பராசியினர்க்கு சூரியபகவான் லோகமூர்த்தியாக 8-ம் ராசியில் சஞ்சரிப்பது மிகவும் கஷ்டமான காலமாகும். தனநிலை, பாதிப்படையும். ஆரோக்கியம், குடும்பசுகம் என்பன திருப்தியளிக்காது. லாபஸ்தானத்தில் வியாழன் சஞ்சரித்தாலும் சனியின் திருஷ்டியைப் பெறுவது நற்பலன்கள் குறைந்தே காணப்படும். 4-ல் ராகு சஞ்சரிப்பதால் சுற்றுடலில் பிரச்சினைகள் தோன்றக்கூடும். வெளிநாட்டுத் தொடர்புகளை 9-ல் சனி ஏற்படுத்தினுலும் சூரியனின் பெலவீனத்தால் பாதிப்படைய நேரிடலாம்.

குடும்பஸ்தர்கட்கு குடும்பாதிபன் பலமடைந்திருப்பது நன்றெனினும் சூரியனின் பெலவீனம் பாதிப்படையச் செய்துவிடும். கடன் தொல்லைகள் ஏற்படலாகும். களத்திர சுகம் குன்றும். புத்திரரால் உதவிகள் கிடைக்கமாட்டாது.

வியாபாரிகட்கு செட்டி புதனின் சஞ்சாரம் வாய்ப்பானதாக இல்லை. அரசாங்க உதவிகள் கிடைக்க மாட்டாது. ஆடம்பரப் பொருட்கள் வியாபாரம் ஓரளவு நன்மையளிக்கலாம். கள்ள மார்க்கட் வியாபாரமும் சிறப்படையாது.

உத்தியோகத்தர்கட்கு மிகக் கஷ்டமான மாதமாகும். பதவியுயர்வுக்குப் பதிலாக பதவியிறக்கம் ஏற்படினும் ஆச்சரியப்படத்தக்கதல்ல. மேலதிகாரிகளின் பழிச்சொல்லுக்கும் ஆளாகவேண்டி நேரிடலாம்.

விவசாயிகட்கு 9-ல் விவசாயி சனி உச்சம் பெற்றிருப்பது நன்றெனினும், சூரியன் பலம் குன்றியிருப்பதால், பயிர்ச்செய்கை, தோட்டச் செய்கை, தானிய விதைப்பு முதலியன பாதிப்படையும். காணி, பூமி சேர்க்கைக்கும் பலன் குன்றியுள்ளது.


தொழிலாளர்கட்கு தொழிலாளி சனி நன்நிலையிலிருந்தாலும் தொழில்கள் நன்கு நடக்க இடமில்லை. தொழில் மாற்றம் நல்ல முறையில் அமையாது. சக தொழிலாளரால் கெட்ட பெயர் வாங்க நேரிடும்.

மாணவர்கட்கு கல்வி முயற்சிகள் நற்பலனைக் கொடுக்க மாட்டாது. வர்த்தகம், கட்டடம், பொறியியல் கல்வி பயில்வோர் சிறிது முன்னேற்றம் காண்பர். கல்வி வாய்ப்புக்கள் கைகூடலாகும்.

பெண்களுக்கு காதல் விவகாரங்களில் ஈடுபட்டு அவப்பெயரைத் தேடவேண்டி யேற்படலாம். குடும்பப் பெண்கள் கணவன்மாருடன் சச்சரவுகளையே காண்பர். தொழில் புரியும் பெண்கள் அல்லற்படுவர்.

அதிஷ்ட நாட்கள்: செப் 18 பி. ப, 19. 26 பி. ப, 27; 30 பி. இ.
அக் 1, 2, 5 பி. ப, 6, 7 பி.ப.

துரதிஷ்ட நாட்கள்: செப் 20பி.ப; 21, 24 பி.ப, 25 25, அக் 3, 4.



# மீனம்

பூரட்டாதி 4-ம் கால், உத்தரட்டாதி, ரேவதி

இந்த ராசியில் உதயமானோர்க்கு சூரிய பகவான் தாம்ர மூர்த்தியாக 7-ம் இராசியில் பவனி வருவது சிறப்பல்ல. அத்துடன் அட்டமத்துச் சனியின் தாக்கமும் ஏற்படலாகும். 10-ல் வியாழன் சஞ்சரிப்பதால் இருப்பிட மாற்றம் உண்டாகலாம். 9-ல் கேது வெளிநாட்டுத் தொடர்புகளை விருத்திசெய்ய வழிவகுக்கும். இனசன உறவுகள் பாதிப்படையும். ஆரோக்கியம் சிறக்காது.

குடும்பஸ்தர்கட்கு நற்பலன்கள் குன்றும். குடும்பஸ்தானாதிபதி செவ்வாயின் சஞ்சாரங்கள் நன்மை பயப்பதாக இல்லை. புத்திரரால் உதவி கிட்டாது. களத்திரவழி கஷ்ட பலனளிக்கும்.

வியாபாரிகட்கு வியாபாரம் மந்தநிலையை அடையும். வங்கி நிலையும் திருப்தியளிக்காது. ஆடம்பரப் பொருட்கள் சம்பந்தப்பட்ட வியாபாரிகட்கு கஷ்டம் அதிகரிக்கும். வெளிநாட்டுத் தொடர்புள்ள வர்த்தகம் சிறிது நன்மையளிக்கும்.

உத்தியோகத்தர்கட்கு உத்தியோக பலன்கள் குறைவாகவே இருக்கின்றது. தொழில் மாற்றம் இடமாற்றம் என்பன நன்கு அமையாது. மேலதிகாரிகளுடன் சர்ச்சை ஏற்படலாகும். நினைத்தபடி கருமங்கள் நடைபெறாது.

விவசாயிகட்கு விவசாயி சனி அட்டம ராசியில் சஞ்சரிப்பது நற்பலன்களைக் கொடுக்கவிடாது. காணி, பூமி சேர்க்கைப்பலன் கிடைக்காது. தானிய விதைப்பு முதலியன நன்மையளிக்காது.

மாணவர்கட்கு கல்வித்துறையில் எவ்வித முன்னேற்றமும் ஏற்பட இடமில்லை. வெளிநாட்டுக் கல்வி வாய்ப்புக்களும் நற்பலன் தராது. பரீட்சைகளில் சித்தி பெறுவது கடினம்.

பெண்களுக்கு விவாகப் பேச்சுக்கள் இழுபறி நிலையிலேயே இருக்கும். 8-ல் சுக்கிரனின் சஞ்சாரம் காதல் லீலைகளால் அவப்பெயரை ஏற்படுத்தும். கணவன்மாருடன் சுமுக உறவு இருக்காது.

அதிஷ்ட நாட்கள்: செப் 20 பி.ப, 21, 28 பி.ப, 29
அக் 3, 4, 8, 9, 13, 14.

துரதிஷ்ட நாட்கள்: செப் 22 பி.ப, 23, 26பி.ப, 27
அக் 5 பி.ப, 6, 7.

# அதிஷ்ட எண் ஞானம்

இ. மகாதேவா 140, செல்லர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

முன் தொடர்ச்சி

(ஆ) திகதி, மாதம், வருஷம் மூன்றையும் கூட்டி வரும் மொத்த எண்ணின் ஒற்றை எண் பலனையும் பெயர் எழுத்துக்களின் மதிப்பு எண்கனின் பலனையும் இப்பகுதியில் ஒருவர் அறிந்து கொள்ளலாம்.

**கூட்டு ஒற்றை எண் 6 ஆதிக்கர்கள்:**

பொதுவாக சமுதாயத்தில் உயர்ந்த அந்தஸ்தும், செல்வாக்கும் உடையவர்களாக இருப்பர். பேச்சுச் சாதுரியமும், தந்திர புத்தியும் மிக்கவர்கள். எல்லோரும் எப்படியோ இவர் சொல்லுக்குக் கட்டுப்பட்டு விடுவர். எதிரிகளை கணப்பொழுதில் இனங்கண்டு ஒழித்து விடுவர். இவரை எவராலும் இலகுவில் வெல்ல முடியாது. சுயகாரியப் புலியாகவும், பணம், பட்டம் உயர் பதவிகளை உடையவர்களாகவோ அல்லது மேற்கூறியனவற்றை கொண்டவர்களின் ஆதரவுடன் பல முறையற்ற செயல்களை பல கொடுமைகளைச் செய்யக்கூடியவராகவோ உள்ளனர். நடிப்புக் கலந்த நாஜூக்கான பேச்சால் எல்லோரையும் வசீகரிப்பர். வெற்றியைக் கண்டு களித்திடும் இவர்கள் சிறு தோல்வியிலும் துவண்டு வீழ்வர். சிற்றின்ப விருப்பே இவர்களுக்குச் சிறுமையைத் தரும். எதையும் உள்மனநோக்கும் கொண்டு இரசித்திடுவர். லொத்தர், சூது போன்றவற்றில் வெற்றி கிடைக்கும். எதிர்ப்பாலார் உதவிகள் கேட்டால் ஓடி ஓடி உதவுவார்கள். தமக்குப் பிடித்த ஒருவருக்கு உதவி செய்யும் இவர்கள், அவரைப் பிடிக்காதபோது தீமையும் செய்யத் தயங்கமாட்டார்கள். பிடிவாதக்குணம் மிகுந்திருக்கும். ஆயினும் அதுவே அவர்களுக்கு வெற்றியைக் கொடுக்கும். தான் வைத்ததே சட்டம் என நிற்கும் இவர்கள், முன்னுக்கு பின் முரணாகப் பேசி, இனஜனப் பகையைச் சம்பாதிப்பர். நண்பருக்கு நாணயமுடையவராகவும் குடும்பப் பாசம் குறிப்பாக புத்திரபாசம் உடையவராகவும் இருப்பார்கள். பணமே இவர்களின் உயிர்நாடி. ''பணமில்லாதவன் பிணம்'' ''என்றும் பணம் உடையார் அனைத்தும் உடையார்'' என்பர்.

தொழில்

பங்குத்தொழில், கமிஷன் வியாபாரம், நகை, புடவை, சாய்ப்புச்சாமான் போன்ற பெண்கள் விரும்பும் பொருட்களை வியாபாரம் செய்தால் இலாபமடையலாம். கைத்தொழில், இராணுவம், நீர் சம்பந்தப்பட்ட தொழில் என்பவற்றில் சிறப்படைவார்கள். அரசாங்கப் பதவிகள் அவ்வளவு சிறப்புடையதாகாது.

நோய்

ஜனன இந்திரிய வியாதிகளால் வருந்துவர். சிறுநீர் வியாதி, விறைப்பு, காய்ச்சல், மலச்சிக்கல், தலையிடி, பெண்களுக்கு கெற்ப சம்பந்தமான வியாதிகள் வரும். ஆண்களாயின் — இந்திரிய விரயத்தால் சிலருக்கு உடல் சோர்வு, மனோநிலைகள் பாதிப்பு ஏற்படும். மேலும் நீர்ச்சுரப்பிகளால் கைகால், தொண்டை வீக்கங்களும் அடிக்கடி ஏற்பட இடமுண்டு. கிழக்கு, வடக்கு வாசல் வீடுகளில் குடியிருந்தால் சிறப்பு ஏற்படும்.

உணவு

பழவகை, இலைவகை, கச்சான், கடலை, எள்ளு, கஸ்கொட்டை, பாதாம் பருப்பு முதலிய உணவுகளை அதிகம் சாப்பிடவும். காரமான உணவுகளை குறைத்தல் நன்று. அடிக்கடி சாப்பிடுவதை நிறுத்தவும். இவர்களுடைய வருத்தங்களுக்கு இதுவே காரணமாகும்.

## பெயர் எண்கள் கூட்டு எண்களினுல் வரும் பலன்கள்

**15-ம் எண்:-** இந்த எண் பாலியலில் அதிக தாக்கசக்தியைத் தரவல்லது. வசீகரமான எண் ஆகும். பலவிதமான நிறமாற்றங்களை விரும்பக் கூடியது. அடிக்கடி உணர்ச்சி வசப்படக்கூடிய

வர்களாக இவர்கள் இருப்பர். வெளிப்புறக்கவர்ச்சி அதிக பாதிப்பை ஏற்படுத்தும்: அழகிய, கவர்ச்சிகரமான உருவத்தையும், உடைகளையும் விரும்புவர். காதல், காதல் என அலைந்து திரிவர். கலைத்தொழிலில் உயர்வும் புகழும் வரும். மற்றவர்களை எப்படிக் கவர்வது என்பது இவர்களுக்கு கைவந்த கலையாகும். தனது எண்ணத்தை, விருப்பத்தை நிறைவேற்றுவதற்காக எல்லாவித ஜால வித்தைகளையும் பயன்படுத்துவர். இவர்களுடைய வாழ்வு ஏனைய பிறப்புக் கூட்டு எண்களில் தங்கியுள்ளது. 4,8 எண்களாக அமையுமானால் திடீரென மறைமுகமான செயல்களைச் செய்வதாலும், கெட்டவர்களின் சேர்க்கையாலும் சூழ்ச்சிக்குள் அகப்பட்டு வேதனைப்படுவர். இவர்கள் நாவன்மை உடையவர்கள். இயல், இசை, நாடகத் தொடர்போ அன்றி நடித்து, நடித்து தமது காரியங்களைச் சாதிப்பதில் கெட்டிக்காரர். நண்பர்களால் பெரியவர்களரல் அன்பு, ஆதரவு, உதவிகள் எதிர்பாராத சமயம் வந்து சேரும். சிற்றின்ப ஆசையில் அவதானம் தேவையாகும். ஆழமறியாமல் காலை விட்டு அடி உதைப் படுவர்.

**24-ம் எண்** அரசாங்கத்தில் அல்லது பொதுவாழ்வில் உயர்ந்த பதவி, பணம் உள்ளவர்களின் உதவிகள் கிடைக்கும். அவர்களுடன் இவர்கட்கு தொடர்பு இருந்து கொண்டிருக்கும். அதிகார இடங்களில் தொழில் அமையும். வாழ்க்கையில் படிப்படியாக முன்னேறிவிடுவர். வாக்குச் சாதுரியம இருக்கும். சந்தர்ப்பத்திற்கு ஏற்றவிதமாக மாறக்கூடியவர்கள். வியாபாரம், சட்டம், தங்க வியாபாரம், வட்டிக்கடை, சாய்ப்புச் சாமான்களின் தொடர்பு தொழில் அமைந்தால் பெருத்த இலாபம் அடைவார்கள். ஆரம்ப வயதில் சிற்றின்ப போக உணர்வு உடைய இவர்கள் ஜனன இந்திரீய சம்பந்தமான நோய்களால் வருந்துவார்கள். தனது பெலவீனங்களை மறைத்து வாழ்வார்கள். இவர்களில் ஒரு பகுதியினர் ஒருவித மனநோயால் மற்றவர்களை வருத்திக் கொண்டிருப்பார்கள். இந்திரீய அல்லது கெற்ப சம்பந்தமான வருத்தங்களை உடனே சிகிச்சை செய்து மாற்றவேண்டும். இல்லாவிடில் இதனால் வருந்த நேரிடும், இடாம்பீக வாழ்வு வாழ விரும்புவர்:

**33-ம் எண்** ''அருள் இல்லார்க்கு அவ்வுலகமில்லை. பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை'' என்றார் வள்ளுவப் பெருமான். ஆனால் இவர்களுக்கு அருளும் பொருளும் படிப்படியாகக் கிடைக்கும். தமது சக்தியை அறியாது இந்த எண்ணில் எத்தனையோ பேர் அல்லற்படுகின்றார்கள். தொழில்நுட்பம், கலைஅம்சம், சங்கீதம், மின்சாரம், சமய சாஸ்திரத் தொடர்பு இவற்றில் ஒன்றில் அபாரத் திறமை மிக்கவர்களாக இருப்பர். தெய்வ பக்தி மிக்கவர்களாகவும் தெய்வ அருள் உடையவர்களுடன் தொடர்பு உள்ளவர்களாகவும் இருப்பின் இவர்களுக்கு பொருள் சேர்க்கை அதிஷ்டம் எதிர்பாராத முறையில் ஏற்படும். ஆரம்பத்திலிருந்து மத்திம வயதுவரை பலவித சுகபோகங்களைத் தரும் இந்த எண் வயது சென்றதும் பெண்ணின் தொடர்பில் தெய்வீகத்தன்மை மாறி அவமானமும், தரித்திரமும், சந்தேக வாழ்வும் ஏற்படும். பலர் ஆதரவற்ற முறையில் தமது இறுதிக்காலத்தை முடித்துக்கொள்வார்கள். எனவே தெய்வபக்தி மிக்கவர்களாக இருக்க வேண்டியது மிக அவசியமாகும். மேலும் முறைமாறிய பெண்களின் தொடர்பை விலத்தி நடக்கப் பழகிக்கொள்ள வேண்டும். சிறுநீர் வியாதியால் வருந்துவார்கள். தொழில் நுட்பம் சம்பந்தமான தொழில் தொடர்பு ஏற்படின் சிறப்படைவார்கள்.

**42-ம் எண்** எதிர்ப்பாலாரால் சகல விதத்திலும் முன்னேற உதவிகள் கிடைக்கும். அதிஷ்டகரமான எண் ஆகும். சுகபோக வாழ்வு ஏற்படும். வாழ்க்கையில் உயர்நிலையில் உள்ளவர்கள். பெரியவர்கள் முன்னவர்களின் சொத்து வந்துசேரும். காணி, பூமியால் லாபம் கிடைக்கும். வாழ்க்கையில் படிப்படியாக முன்னேற்ற நிலைகளை அடைவார்கள். இவர்களின் திட்டங்களை நிறைவேற்ற பலரும் உதவி செய்வர். ஜனவசீகரத் தன்மை, நண்பர்களின் உதவிகள் அடிக்கடி கிடைக்கும்.

**51-ம் எண்** விடாமுயற்சி, திடீர் வலிமை ஆற்றல் என்பவற்றை ஏற்படுத்தக்கூடிய எண் ஆகும். எதையும் எதிர்த்துப் போராடி வெற்றி பெறுவார்கள். இவர்களது உழைப்பு, திட்டம் எதுவானாலும் திடீரென உயர்வு ஏற்பட்டுவிடும். உடல், மனோசக்தியால் அடிக்கடி உணர்ச்சிவசப்படுவதும், புதுப்புதுத் திட்டங்களைத் தீட்டுவதும் சர்வசாதாரணமாக இருக்கும். தரைப்படை, கடற்படை, பொலிஸ்பகுதி, கடல் சம்பந்தமான தொழில்களில் பணிபுரிபவர்களும் திடீரெனத்

(23-ம் பக்கம் பார்க்க)

# அபரக் கிரியைகள்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

சிராத்தத்திற்கு ஆகாத பொருட்கள்!- கடலை, பீர்க்கங்காய், நீற்றுப் பூசணிக்காய், முருங்கைக் காய், அத்திக்காய், வெங்காயம், வெள்ளைப்பூண்டு, கொவ்வை, எருமைப்பால், எருமைத்தயிர் முதலியன.

பொருள் இல்லாதவர் சிராத்தம்:- சிராத்தத்திற்குப் பொருட்கள் வழங்க இயலாதவர் காய் கனி கிழங்கு எள்ளு இவைகளையேனும் சற்பாத்திர பிராமணருக்குக் கொடுத்துப் பிரதட்சண நமஸ்காரஞ் செய்து தில தருப்பணம் பண்ணித் தான் திருப்தியாக உணவு செய்தல் வேண்டும். தருப்பணஞ் செய்தற்கும் வல்லமை இல்லாதிருப்பின் பசுக்கூட்டங்களுக்கும் புல்லைக்கொடுத்தல் மேலாம். இதற்கு விதி.

"இடிகொண்மாவினூற் பிண்டமேயாயினு மிடுக
இல்லையென்றிடி லெள்ளுடன் புனல்கையாலிறைக்க
வல்லமை பெறுதாயினுமாவின மருந்தப்
புல்லதாயினும் போடுக......"

—திருச்செந்தூர்ப்புராணம்

சிராத்தத்திற்கு உபயோகமாகும் பத்திரம்-மலர்: துளசி, வில்வம், தாமரை, சண்பகம், அறுகு, புன்னை, நந்தியாவர்த்தை, எட்பூ, மருக்கொழுந்து, வெட்டிவேர் முதலியன.

சிராத்தத்திற்கு ஆகாதவை:- மகிழம்பூ, அலரிப்பூ, சிறுசண்பகப்பூ முதலியன.

சிராத்த தினத்திலே செய்யத்தக்க புண்ணிய காரியங்கள்:- சற்பாத்திரர்களுக்கு அன்னதானம் ஆடைவகை முதலியன வழங்கலும் திருக்கோயிலிலே கடவுளுக்கு அபிடேகம், பூசை, திருவிளக்கேற்றுதல் முதலியனவுமாம்.

சிராத்த தினத்திலே செய்யத்தகாதன:- தயிர் கடைதல், நெல்குத்துதல், நெய் முதலிய பொருட்களைக் கொடுத்தல், வாங்குதல், கண்ணீர் விடுதல், கோபித்தல், பொய் சொல்லுதல் சிந்திய அன்னத்தை மிதித்தல்.

சிராத்தங் கொடுக்கத் தக்க பாத்திரர்;- பிதிர் தேவர் பொருட்டு இறந்தவர் பெற்ற தீட்சையேனும், அதனின் மேலான தீட்சையேனும் பெற்ற சற்பாத்திரர்களுக்குச் சிராத்தங் கொடுக்கலாம்.

வேத சிவாகமங்களை ஓதி உணர்ந்து பாவங்களை விலக்கித் தருமங்களைக் கைக்கொண்டு கடவுளை மெய்யன்போடு வழிபடுபவரும் தம்மைப் போலவே பிறரும் நன்னெறியில் நின்று உய்ய வேண்டுமென்றெண்ணி அவர்களுக்கு அந்நெறியை உபதேசிப்பவருமானோர் சற்பாத்திரராவர். அசற்பாத்திரர்களுக்குச் சிராத்தங் கொடுத்தலாகாது. வேதசிவாகமங்களைக் கற்று அதன்வழி நில்லாதோரும், பிறர்க்கு அந்நெறியைக் கூறி வழிப்படுத்தாதோரும் சிராத்தத்திலே அன்புடன் கொடுத்தவைகளைத் திருப்தியுடன் ஏற்றுக்கொள்ளாதவருமானோர் அசற்பாத்திரராவர். இவர்களுக்குச் சிராத்தங் கொடுத்தலாற் பலன் உண்டாவதில்லை.

சிராத்தம் நடைபெறும்போது செய்யத்தக்கன:- வேதபாராயணஞ் செய்தல், தமிழ் வேதங்களையும் புராணங்களையும் ஓதுதல், இவை பிதிர்களுக்கு மிகத் திருப்தியானவையாம்.

உபகாரம்!- சிராத்த முடிவில் ஆசாரியருக்கு உபகாரஞ் செய்து அவரை உபசரித்து வணங்கி ஆசீர்வாதம் பெறுதல் வேண்டும். உபசாரஞ் செய்யும்போது அஃது ஆசாரியருக்கென்று எண்ணிக் கொடுத்தலாகாது. பிதிர்தேவர்களுக்கென்றே எண்ணிக் கொடுத்தல் வேண்டும்.

சிராத்த காலம்:- இராக் காலத்திலும், சூரியோதயம் முதல் ஆறு நாழிகை வரையுள்ள காலைப் பொழுதிலும், இராக் காலத்தின் இறுதி முகூர்த்தமாகிய இரண்டு நாழிகையும் பகற் காலத்தின் இறுதி முகூர்த்தமாகிய இரண்டு சந்தியாகாலமும் தவிர்ந்த ஏனைய நேரங்கள் பிதிர் சிராத்தத்திற்கு உரியனவாம்.

உணவு:- சிராத்த காலங்களிலே அதிதிகளுக்கு அன்னங்கொடுத்தல் பெரும் புண்ணியமாகும். பரமசிவனும் பார்வதி அம்மையும் முருகக் கடவுளும், திருமாலும், பிரமாவும், தருமதேவதையுமாகிய சகலருங்கூடி அதிதி வடிவமாய் வருவரென்று மெய்நூல்கள் கூறுகின்றன.

அரசுகொள் கடன்களாற்றி மிகுதிகொண் டறங்கள் [பேணிப்
பரவருங் கடவுட்போற்றிக் குரவரும் விருந்துண் [பண்பின்
விரவிய கிளையுந் தாங்கி விளக்கிய குடிகளோங்கி
வரைபுர மாடநீடி மலர்ந்துள பதிக ளெங்கும்.

(முற்றும்) —பெரியபுராணம்

# எண் சோதிடத்தில் எண் 8

— மூ. மு. மார்க்கண்டு —

சர்ச்சைக்குரிய 8 எண்ணைப்பற்றி பலர் அஞ்சுகின்றனர். நம்மில் பலரும் வெளிநாட்டோர் சிலரும் துர் அதிஷ்டம் வாய்ந்த எண் என்றும் விதியின் விளையாட்டுக் கருவி என்றும் — மூன் பிறப்பில் செய்த பாபவினைக்கேற்ப இப்பிறப்பில் 8 எண்ணில் பிறக்கிருர்கள் என்றும் 8 எண்ணில் பிள்ளைகள் பிறந்தால் தாய் தந்தை இனத்தவர்கள் கவலை அடைகிருர்கள். இப்பிள்ளையின் பிறப்பின் கவலையைத் தீர்க்க எண்சோதிடத்தின் மூலம் பெயர் வைத்தால் நன்மை தரும் என்ற நோக்குடன் எண் சோதிடரை நாடி பெயர் வைக்கிருர்கள். விவாகப் பேச்சில் 8 எண்ணுடைய பெண்ணே ஆணே வந்தால் அந்த விவாகத்தை செய்வதறகு அஞ்சுகிருர்கள், சிலர் நிச்சயமாக 8 எண்ணுடையவர்களை விவாகம் செய்யாமல் விட்டு விட்டார்கள். 8 எண் உடைய இலக்க வீடுகளில் இருக்க அஞ்சுகிருர்கள். வியாபார ஸ்தலம் எட்டு எண்ணுக வந்தால் வியாகூலம் அடைகிருர்கள். 8 எண்ணுடைய வாகனத்தை வேண்டாம் என்று சொல்கிருர்கள்: 8 எண்ணுடைய வாகனத்தை வாங்கியவர் பின் அதை விறக எத்தனித்தால் அவ்வாகனத்தை வாங்க எவரும் முன்வரரர். பின் அவ்வாகனத்தை நட்டத்திற்கு விற்கிருர். அவ்வாகனத்தை மலிவாக வாங்கி நம்பரை மாற்றுகிருர். சோதனைக்கும் வேதனைக்கும், சாரகன் சனி என்றும் 8-ம் எண்ணை சனி என்றும், துர் அதிஷ்ட நம்பர் என்றும் கவலையும் விரக்தியும் அடைகிருர்கள். 8 எண்களில் பிறந்த பலர் எட்டின் கொடுமை, சோதனை, துர் அதிஷ்டம் நீங்க இரவு பகலாக தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவர். ஒன்பது எண்ணுள்ளும் 8 எண்ணைப் பற்றி எண் சோதிடர்களும் மற்றவர்களும் பயப்படுத்தி 8 எண்ணில் பிறந்தவருடைய மனோ நிலையை பாழ்படுத்தி அவர்களை விரக்திக்குள்ளாக்கி, அதனல் அவர் மனமுடைந்து தேக வலுக்குன்றி நடைப்பிணமாக நடமாடுகிருர்கள். மன விரக்தி அடைபவர்கள் வாழ்க்கையில் முன்னேற முடியாது. விதி கெட்டவனுக்கு மதியைப் பார் என்று சோதிடம் கூறுகிறது. அதாவது கிரக நிலைகள் சாதகத்தில் பெலவீனப் பட்டால் மனதுக் காரகனுன சந்திரன் பெலம் அடைவது. சோதிட மூலம் ஒருவரின் வாழ்க்கையை வழிகாட்டியாக அமைக்க வேண்டுமே தவிர அதில் உள்ள தீயபலன்களை மிகைபடக் கூறி இன்னும் மனத்தைப் பாழ்படுத்தி அவரைக் கஷ்ட நிலைக்கு உள்ளாக்கக் கூடாது. ஒருவரின் பலனைக் கூறும்போது அப்போது கஷ்ட பலன் அவரின் சாதகத்தில் இருந்தால் அதற்குரிய நிவாரணங்களை சாந்தி முறைகளை கையாளச் செய்ய வேண்டும். 8 எண்ணில் பிறந்தவர்களை 8 எண் கூடாது என்று சொல்லி ஆண்டவன் காப்பாற்ற வேண்டும் என்று எண் சோதிடர்கள் சொல்லி அவ்வெண்ணில் பிறந்தவர்களை ஒதுக்கித் தள்ளி ஒதுங்கி வாழச் செய்கிருர்கள். 8 எண்ணில் பிறந்தோர் தாங்கள் பிறந்த திகதி துர் அதிஷ்டமானது. தாங்கள் நிம்மதியாக வாழமுடியாது தங்களுக்கு முன்னேற்றமே இல்லை என்று அங்கலாய்க்கிருர்கள். இதைப்பற்றி சிந்தித்து முகத்திலே சந்தோஷக் குறி இல்லாமல் விசனக் குறியுடன் வாழ்ந்து வருகிருர்கள். இப்படி நினைப்பதோ சிந்திப்பதோ விரக்தி அடைவதோ மிகவும் தவறு. உண்மையில் 8 எண் மிக உயர்ந்த நிலையில் மிகச் செல்வந்தர்களாகவும், பெரும் பதவியை வகிப்போர்களாகவும் அரசியல் செல்வாக்குப் பெற்று எல்லோருக்கும் தெரிந்தவர்களாகவும் வாழ வழி வகுத்திருக்கிறது. 8 எண்ணில் பிறந்தவர்கள் சிறப்பாக வாழ்ந்திருக்கிருர்கள். 8 எண் துர் அதிஷ்ட எண் என்ருல் மற்ற எண்களில் பிறந்தவர்களும் மிகவும் கஷ்ட நிலையில் வாழ்ந்திருக்கிருர்கள், வாழ்ந்தும் வருகிருர்கள். எட்டு எண்ணில் பிறந்தால்தான் கஷ்ட நிலைமை அடைந்து வாழ நேரிடும் என்ற மனப் போக்கை சிந்தனையை 8 எண்ணில் பிறந்தவர்கள் மாற்ற வேண்டும்.

ஒன்பது கிரகங்களில் எந்த ஒன்றும் கெட்டதோ நல்லதோ என்று கிடையாது. ஒவ்வொரு

கிரகமும் தன் ஆட்சிக்காலத்தில் ஒருவர் பிறக்கும் போது நல்ல நிலையில் பெலம் பெற்று இருந்தால் நன்மையும் பெலவீனப்பட்டு கெட்ட நிலையில் இருந்தால் கெட்ட பலனையும் தரும். இதே நிலையில் தான் ஒவ்வொருவரும் ஒவ்வொரு எண்ணுக்கும் உரிய கிரகங்கள் சாதகத்தில் என்ன நிலையில் இருக்கிறதோ அதன்படி நன்மையும் தீமையும் அடைந்து வாழ்வார்கள். இந்நிலை எல்லா எண்ணில் பிறந்தவர்களுக்கும் உண்டு. 8 எண்ணில் பிறந்தவர்களுக்குத் தான் உண்டு என்று சொல்வது தவறு. 8 எண் சனியைக் குறிக்கும் என்பர் சிலர். ராகுவைக் குறிக்கும் என்று மற்றும் சிலர், கேது என்றும் இன்னும் சிலர் பகர்வர். 8 சனியைக் குறிக்கும் என்று எடுத்துக்கொண்டாலும் சனி பகவானைக் கெட்டவராகக் கூறுவது தவறு அல்லவா? சோதிட அனுபவம் உள்ளவர் சிந்திக்கலாம். சனி ஈஸ்வரனைப் போன்று கொடுப்பவர் கிடையாது. அவரைப்போன்று நீதிபதியும் கிடையாது. நியாயமற்ற முறையில் செல்லமாட்டார். ஒருவர்மீது சனீஸ்வரன் பூரண பலம் பெற்று இருந்தால் அவர் தவறான வழிக்குச் செல்லவே மாட்டார். சனீஸ்வரனின் பலம் குறைந்து மற்றக் கிரகங்களின் பலம் மேலோங்கி தவறான வழிக்கு செல்வதையும் சனீஸ்வரன் தடுத்து நிறுத்த முயலுவார் என்றும், மற்றக் கிரகங்களின் தன்மையினால் தவறான பாதையில் சென்றவரைத் தண்டிப்பதில் தவறமாட்டார் என்றும் சோதிட சாஸ்திரம் கூறுகிறது. இப்படியான நீதிக் கிரகத்தை நேர்மைக்கிரகத்தை 8ன் கிரகம் சனி என்று கூறி பெலவீனப்படுத்தி கூறுவது மிகவும் தவறாகும். இவ்விஷயத்தை சோதிடர்களாகிய நாங்கள் மிகவும் சிந்தித்து செயலாற்ற வேண்டும். எந்த எண்ணில் பிறந்தாலும் அந்த எண்ணுக்குரிய கிரகம் பிறக்கும்போது கிரக நிலையில் பெலம் பெற்றால் தான் அவ்வெண்ணின் நற்பலனையும் அவ்வெண்ணுக்குரிய கிரகம் கிரக நிலையில் பெலவீனப்பட்டால் துர் அதிஷ்ட நிலையில் வாழவேண்டும். இவற்றைச் சிந்தித்து எண் சோதிடத்தில் பலன் அறியவேண்டும்.

நட்சத்திர ரீதியில் 8 எண் எப்படி செயல்படும் என்பதை அறிவோம்: 8, 17, 26. இந்த எண்களில் பிறந்தவர்கள் எல்லோரும் சனீஸ்வரனைக் குறிக்கும் எண் என்று சிலரும், ராகு கேதுவைக் குறிக்கும் எண் என்று சிலரும் கூறுவார்கள். எனது அனுபவ ரீதியில் பார்க்கும்போது நட்சத்திர ரீதியில் இந்நிலை மாறுபடும். 8 எண் நட்சத்திர ரீதியில் வெள்ளியையும் இராசி அடிப்படையில் செவ்வாயையும் குறிக்கும். 17 எண் நட்சத்திர ரீதியில் செவ்வாயையும் இராசி அடிப்படையில் சூரியனையும் குறிக்கும். 26 எண் நட்சத்திர ரீதியில் வியாழனையும் இராசி அடிப்படையில் வெள்ளியையும் குறிக்கும். இந்த நிலையை வைத்து 8 எண்ணில் பிறந்தவர்களை ஆராய்ந்து பார்த்தால் அவர்களின் பலன்கள் யாவும் உண்மையாக இருக்கும். இந்த நிலையை வைத்துப் பார்க்கும்போது 8 எண்ணில் பிறந்தவர்களும் விதி எண்ணாக அதாவது மூட்டு எண்ணாக அமைந்தவர்களும் பிரபலமாக இருக்கமுடியும் என்பதையும் அறியமுடிகிறது. நட்சத்திர ரீதியில் அவர்களின் எண்களுக்கு ஏற்ற பெயர் அமைந்திருக்கிறது. பெயர் எண் அவர்களின் சாதகத்தில் நல்ல நிலையில் இருக்கிறது. அவர்களே அதிஷ்டமாக வாழ்ந்திருக்கிறார்கள். வாழ்கிறார்கள். வாழ்வார்கள். (மிகுதி அடுத்த இதழில்)

# அன்பினை யாசிக்கிறேன்

— கோப்பாய் எஸ். சிவம் —

அன்னையுன் ஆலயம் தேடிவந் தேத்திட
ஆனவை என்பதம் என நினைத்தேன்
இன்றவை எத்தனை மானிடர் இல்லங்கள்
தேடி நடந்திட நீ நினைத்தாய்

உன்பதம் மீதினில் கோடிமலர் வைத்து
ஓய்வின்றிப் பாடிட நான் நினைத்தேன்
இன்றென திருகையும் ஏழ்மையி னால்பிறர்
ஈவதை நோக்கிஎன் தாழவைத்தாய்

அன்புடை யார்என்று நான்நினைத்தோர் என்னை
அந்நியன் ஆக்கிட நான் பதைத்தேன்
என்னை இங்கேஒரு அன்னியன் என்றின்று
ஏனம்மா நீயும்இங் கேநினைத்தாய்

பொன்மணி வைரங்கள் பூந்துகி லாடைகள்
பொன்மனை தேடியா நான்விரைந்தேன்
அன்பினை மட்டுமே அளவின்றி நான்பெற
அழுதழு தேதினம் யாசிக்கிறேன்.

# அன்னையைக் கண்டேன் - 28 "ஆனந்தபைரவி"

## இனுவையூர் வளர் கன்னி சிவகாமியம்மை

தேனுர் மலர்க்கொன்றைச் செஞ்சடையோன் இவன் பாகம் கொண்ட
மானுர் விழிமங்கை மட்டார்குழலி மறைவணங்கும்
கானுர் கடிமல ராரிபொழில் நல் லினுவைக்கு வந்த
ஆனு வருட்சிவ காமியருட் செல்வம் ஆர்த்துய்ம்மினே. —இ. திருநாவுக்கரசு

நீண்டகால இடைவெளிக்குப்பின் தேவி திருத்தல யாத்திரைக்காக நாம் புறப்பட்டபோது அபரிமிதமான வரவேற்பு எமக்குக் கிடைத்தது. எங்களை மதிப்போடு வரவேற்று உபசரித்து ஆலயத்தின் அழகுத்தோற்றத்தைக் காண்பித்து வரலாறுகள், விபரங்கள், மலர்கள், வெளியீடுகள் முதலிய ஆவணங்களைத் தந்து மகிழ்வூட்டினுர்கள் ஆலயத்தின் நிர்வாகியும் அர்ச்சகர் குடும்பத்தினரும்.

ஆலயத்தின் முன்னுல் போய் நிற்கின்ருேம். அழகாக அமைக்கப்பெற்ற புத்தம்புதிய மணிமண்டபமும், இராஜகோபுரமும் காணப்படுகின்றன. மணிமண்டபத்தின் தூண்கள் சிற்பவேலைப்பாடுகளுடனும், விதானம் வண்ணக் கலவைகளாலான சித்திரங்களுடனும் பொலிகின்றன.

சித்திரத் தேர்கள் மூன்று, மண்டபங்கள் அமைக்கப் பெற்றுப் பாதுகாப்பாக நிற்கின்றன. கோபுர வாசலினூடு நுழைகின்றபோது அம்பிகையின் அருள் நம்மீது கவிகின்றதென்பதைப் பரிபூரணமாக உணர்ந்து கொண்டு நமது கரங்கள் சிரமேற் குவிகின்றன. அங்கு நிலவும் அமைதியும், எளிமையும், இனிமையும், தூய்மையும் துலங்கும் தெய்வீகத்தன்மை இப்படி ஓர் உணர்வினை ஏற்படுத்துகின்றது.

நந்தி, பலிபீடம், துவஜஸ்தம்பம் இவற்றையெல்லாம் தாண்டி எமது விழிகள் கருவறையில் குவிகின்றன. அபய வரதங்களுடனும், பத்மம், அக்ஷமாலை என்பவற்றைத் தாங்கிய கரங்களுடனும் நின்ற திருக்கோலத்தில் எழில் சிந்தும் கருணை முகத்துடனும் காட்சி தரும் சிவகாம சுந்தரியை அள்ளிப் பருகியபடி உள்வீதியில் மெல்ல, மெல்ல நடக்கின்ருேம். தெற்குப் புறத்தில் மடைப்பள்ளியுடன் இணைந்து அர்ச்சகர் குடும்பத்தினர்க்கு இடவசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. அருகில் பல அறைகள் (களஞ்சியம் முதலியன) வசதியாக அமைக்கப்பட்டுள்ளன. உள் வீதி முழுவதும் கூரை அமைக்கப்பட்டிருக்கிறது.

நிருதி திக்கிலே பிள்ளையாரும், வாயு திக்கிலே வள்ளி தெய்வயானை சமேதரான சுப்ரமண்யரும் அமர்ந்து அருள்பாலிக்கின்றனர். நவக்ரஹங்களும், பைரவரும் தத்தமக்குரிய இடங்களில் காட்சி தருகின்றனர்.

உயர்ந்த - விசாலமான - வசதியாக அமைக்கப்பெற்ற யாக மண்டபம் கருத்தைக் கவர்ந்தது. வசந்தமண்டபத்திலே சிவகாமசுந்தரியின் எழுந்தருளி விக்ரஹம் நேர்த்தியான வேலைப்பாட்டுடன் மிளிர்கிறது. விநாயகர், சுப்பிரமணியர் விக்கிரஹங்களும் காணப்படுகின்றன.

தெற்கு வாசல் சந்நிதானத்திலே பழையதும் புதியதுமாக இரு நடராஜ விக்ரகங்களும் சந்தான கோபாலர்; மணிவாசகர் விக்கிரகங்களும் மாத்திரமல்லாமல் உமையம்மையார் சமேத சந்திரசேகரப் பெருமான் விக்கிரகமும் இருக்கிறது. இவற்றுள் மணிவாசகர் சிலை அற்புதமான தோற்றப் பொலிவுடன் விளங்குகின்றது.

இங்குள்ள நடேசரை சிதம்பரேசர் என அழைக்கிருர்கள். மூலஸ்தானம் அமைந்திருக்கும் இடம் சிதம்பர வளவு என அழைக்கப்பட்டதாம். இவ்விடத்தில் நீண்டகாலம் குடில் வடிவில் இருந்த வணக்கத் தலத்தை வைரவநாதர் கற்பகம் என்னும் மாதரசி கற்கோயிலாக மூலஸ்தானத்தை அமைத்துத் திருப்பணி வேலைகளுக்குப் பிள்ளையார் சுழியிட்டு வைத்தார்.

இதற்கு முன்னர் — குடிலிற்கு வருமுன்னர் சிவகாமி அம்மனுக்கு நீண்ட சரித்திரப் பின்னணியொன்று இருக்கிறது. கி. பி. 1263—1312 கால

கட்டத்தில் காலிங்கராயன் என்னும் பாண்டிய வம்சத்து மன்னன் காலத்தில் அவனால் இணுவி வில் கட்டப்பட்ட வீடொன்றிலே சிவகாமியம் பாள், நடராஜர், பிள்ளையார் முதலிய தெய்வங் களை வைத்து வழிபாடாற்றியதற்குச் சரித்திரச் சான்றுகள் உள்ளன. இத்திருவுருவங்களே சிவ காமியம்மன் கோவிலுக்கு ஆதிகாரணம் எனக் கருத இடமுண்டு.

வைரவநாதர் கற்பகம் ஆரம்பித்து வைத்த திருப்பணியை அவர் மகள் சிவகாமசுந்தரி அவர் கள் தொடர்ந்து நிறைவேற்றி வருவது குறிப்பி டத்தக்கது. அடியார்கள் பலரின் அனுசரணை, திருப்பணி, நிதியுதவி இவற்றினால் படிப்படியாக முன்னேறி நன்னிலைக்கு வளர்ந்துவரும் இவ்வால யத்திலே மடிப்பிச்சை மூலமாகவும், அம்பாள் அருளால் நினைத்த காரியம் கூறல் முதலியவற்றால் திரட்டிய பணம் மூலமாகவும், சிவகாமசுந்தரி என்ற இந்த அம்மணி எமது சிவகாமசுந்தரி அம் பாளின் ஆலயத்தில் அனேக கட்டடங்களைக் கட் டுவித்திருக்கிறார்.

இப்போது ஆலயத்தின் நிர்வாகப் பொறுப் புக்களை கந்தையா முதலித்தம்பி சிவலிங்கம் என்ப வர் கவனித்து வருகிறார். நித்திய பூஜைகளை வி. சோமாஸ்கந்தக் குருக்களும் விசேஷ திருவிழாக் களை வை. சபாரத்தினக் குருக்களும் கவனித்து வருகின்றனர்.

இவ்வாலயத்தின் விசேஷ உற்சவங்கள் பற்றி விசாரித்தபோது வியப்படைகிறோம். அவ் வளவு தூரம் மிகச் சிறப்பான முறையில் அநேக திருவிழாக்களை நடத்தி வருகின்றனர்.

பங்குனி உத்தரத்தை அந்தமாகக் கொண்ட மகோற்சவமும், மாசி மகத்திற்கு லட் சார்ச்சனையும், ஐப்பசி மாதப் பௌர்ணமி நாளில் தீப பூஜையும் நடைபெறுகின்றன. இந்தத் தீப பூஜை நாளில் அழகிய கமலாசனத்தின்மீது வீற் றிருந்து அருள் பாலிக்க அம்பிகை எழுந்தருளுவது கண்கொள்ளாக் காட்சி. இவ்விழாவை இந்து இளைஞர் சங்கத்தினர் நடத்தி வருகின்றனர்.

நவசக்தி அர்ச்சனை ஒன்று இணுவில் இந்து மகா சபையினரால் நன்றாக நடத்தப்படுகிறது. இந்நாளில் அம்பிகை வீதிவலம் வருவதற்காக சிறிய தங்கரதம் ஒன்றையே செய்து வைத்திருக் கிறார்கள் அவ்வடியார்கள். இவ்விழாவை நடாத் தும் இந்துமகா சபையினர் சிவகாமி என்ற பெய ரில் சஞ்சிகை ஒன்றையும் சிலகாலம் வெளியிட்டு வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

திருவெம்பாவைக் காலத்தில் சிறப்பான உற் சவம் நிகழ்ந்து கடைசி நாளில் இரதோற்சவம் நடைபெறுகின்றது. இதற்கென்று சிறியதொரு தேர் இங்கே இருக்கிறது.

ஆடிப்பூரம் அம்பிகைக்கு ஓர் அருந்தினமா கும். பகல் சங்காபிஷேகமும், இரவு ஒன்பது குருமார் ஒன்பது விதமான பொருட்களால் அர்ச்சனை புரிவதும் நிகழ்ந்து கற்பூரத் திருவிழா நடைபெறும். இதன்பின் தண்டிகைத் திருவிழா நடைபெறும்.

இதைவிட ஸ்கந்தசஷ்டி, நவராத்திரி முத லிய உற்சவங்களும் சிறப்பாக நடைபெறும். நவ ராத்திரி முதலிய உற்சவங்களும் சிறப்பாக நடை பெறும். நவராத்திரி காலத்தில் நடைபெறும் மகிஷாசுரன் போர் இங்கு மிகச் சிறப்பான உற் சவம். மானோன்புத் தினத்தில் அம்பு போடுவதற் காக இணுவில் கந்தசாமி கோவிலுக்கு அம்பிகை போவது வழக்கம்.

நீண்ட காலத்துக்குப் பின் திருத்தல யாத் திரை மேற்கொண்ட நாம் நீண்ட வரலாற்றுப் பெருமையும் நீள்விழி நிறைந்த கருணையும் கொண்ட இணுவில் சிவகாமி அம்பிகையின் பாத நிழல் கண்ட திருப்தியுடன் அடுத்த தலம் நாடி நடக்கின்றோம்.

---

அதிஷ்ட எண்...... (18-ம் பக்கத் தொடர்ச்சி)

தலைமைப் பதவிகளை அடைபவர்களும் இந்த எண் களின் தொடர்பு உடையவர்கள். இவர்கள் பணம், பதவி, அதிகாரத் தனங்களால் பலருக்கு கெடுதிகளை தம்மை அறியாது செய்து விடுகின் றார்கள். இதனால் பாதிக்கப்பட்டவர்கள் இவர் களை பழி வாங்கக் காத்திருந்து சந்தர்ப்பம் ஏற் படும்போது காலைவாரி விடுவார்கள். உயர்நிலை யில் உள்ளவர்கள் திடீரென சாமானியர்களாவ தும், சாமானியமாகவுள்ளவர்கள் பதவி, பட்டம், பணம் பெற்று திடீரென உச்சநிலை அடைவதும் சகஜம். எல்லோருடனும் அன்புடன் நடந்து கொள்ளவும். அச்சு-எழுத்து தொழில்துறைகளில் பொருளை அதிகம் தரவல்லது. இவர்கள் எதை யும் அஞ்சாது வெளியிடவோ செயல்படுத்தவோ வல்லவர்கள். மறைமுகமாகத் தெய்வத்தை வணங் குவார்கள், வெளியில் நாத்திகம் பேசுவார்கள். அரசியல் தொடர்பு சிறப்பைத் தரும்; மனவுறுதி, உடற்பலம் மிகுந்து காணப்படும் இவர்கள் புயல் வேகத்தில் முன்னேறுவர்.

# நவராத்திரி ஆரம்பம் எப்போது?

ப. பவளம், மயிலிட்டி,

சந்: 17-9-1947 புதன்கிழமை காலை 8-15க்குப் பிறந்த எனது கிரகநிலை, நட்சத்திரம் மகாதசை என்பவற்றை அறியத்தரவும்.

நிவி: உதயலக்கினம்-துலாம்; நட்சத்திரம் - சித்திரை 3-ம் பாதம்; லக்கினத்தில் - சந்திரன்; 2-ல் குரு, கேது; 8-ல் ராகு; 9-ல் குஜன்; 10-ல் சனி; 12-ல் சூரியன், புதன், சுக்கிரன். குஜன் தசையில் இருப்பு 3 வரு 2 மாதம் 16 நாள்.

க. புவனேந்திரன், கிளிநொச்சி.

சந்: இவ்வருட நவராத்திரி ஆரம்பம் 25-9-84 செவ்வாய்க்கிழமை என திருக்கணித பஞ்சாங்கத்திலும், இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கத்திலும், திருக்கணித பஞ்சாங்க மாதக்கலண்டரிலும் குறிக்கப்பட்டுள்ளன. ஆனால் மெய்கண்டான் கலண்டர், லீலா பஞ்சாங்கக் கலண்டர், இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கக் கலண்டர் முதலி

## சந்தேக நிவிர்த்தி ''மகம்''

யனவற்றில் 26-9-84 புதன்கிழமை எனக் குறிக்கப்பட்டுள்ளது. எனவே எத்தினத்தில் நவராத்திரி ஆரம்பம் கொள்வது எனத் தெரியவில்லை. சரியான தினம் எது என அறியத்தருவீர்களா?

நிவி: வாக்கிய பஞ்சாங்க கணிதரின் கணிப்பில் வெளியாகும் மெய்கண்டான் திருக்குறட் கலண்டர், லீலா பஞ்சாங்கக் கலண்டர் என்பவற்றிலும், வாக்கிய கணிதராலேயே வெளியிடப்படும் வாக்கிய பஞ்சாங்கக் கலண்டரிலும் செப்டெம்பர் 26-ந் திகதி புதன்கிழமை நவராத்திரி தினத்தைக் குறித்த வாக்கிய கணிதர் தமது வாக்கிய பஞ்சாங்கத்தில் செப்டெம்பர் 25-ம் திகதி செவ்வாய்க்கிழமை எனக் குறித்துள்ளார். ஒரே கணிதத்தின் அடிப்படையில் வெளியாகும் வெவ்வேறு வெளியீடுகளில் இவ்வாறு மனம்போன போக்கில் விரதாரம்பத்தைக் குறித்துவிட்டு மௌனம் சாதிப்பது இவரின் பொறுப்பற்ற தன்மையையே காட்டுகின்றது. இதனைச் சமயத் தலைவர்களோ, குருமார்களோ அறிந்தும் கண்டிக்காது பாராமுகமாக இருப்பது வருந்தத்தக்கது. அதே நேரத்தில் மற்றைய சமயத்தவர்கள் எள்ளிநகையாடுவதற்கும் இடமுண்டாகின்றது.

மேலும் விரத நிர்ணயத்தை ஆராயுமிடத்து வாக்கிய பஞ்சாங்கப்படி செப்டம்பர் 25-ம் திகதி காலை 9-53 வரையும், அமாவாசை வியாபித்துள்ளது. மறுநாள் பிரதமை காலை 7-29 வரையும் நிற்கின்றது. கடந்த வருடங்களில் நவராத்திரி விரதாரம்ப மாறுபாட்டில் எழுந்த சர்ச்சையின் போது அமாவாசை சேர்ந்த பிரதமை விரதாரம்பத்திற்கு நீக்கப்பட வேண்டும் என்ற திருக்கணித பஞ்சாங்க கணிதரின் வாதத்தை ஏற்றுக்கொண்டு வாக்கிய கணிதர் செப்டெம்பர் 26-ந்திகதி நவராத்திரி ஆரம்பம் என கலண்டர்களுக்கு முதலில் கணித்துக் கொடுத்துவிட்டார். ஆனால் நடந்ததோ வேறு. திருக்கணித பஞ்சாங்கப்படி செப்டெம்பர் 26-ந் திகதி பிரதமை வியாபகம் இல்லாமையால் செப்டெம்பர் 25-ந் திகதி நவராத்திரி ஆரம்பம் கொள்ளப்பட வேண்டியதாயிற்று. திருக்கணித மாதக்கலண்டர் வெளியானதும் விரதாரம்பத்தில் மாறுபாட்டைக் கண்ட வாக்கிய கணிதர் இதுவரை காலமும் தான் கடைப்பிடித்து வந்த கொள்கைக்கிணங்க இம் மாறுபாட்டிற்கு விளக்கமளிக்க முடியாத நிலை ஏற்பட்டுவிடுமே எனச் சஞ்சலப்பட்டுப் போனார். இதனால் பின்னர் பிரசுரிக்கப்பட்ட தமது வாக்கிய பஞ்சாங்கத்தில் நவராத்திரி ஆரம்பத்தை 25-ந் திகதி என ''நைஸாக'' மாற்றிவிட்டார். இதனால் அவரால் வெளியிடப்பட்ட கலண்டருக்கும், பஞ்சாங்கத்திற்கும் மாறுபாடு ஏற்பட்டு விட்டது. எனவே இதற்கு அவரால் விளக்கமளிக்க முடியாது. தான் விட்ட தவறைத் தானே ஒப்புக் கொண்டால் தனது வாக்கிய பஞ்சாங்கத்திற்கு உள்ள மதிப்பு குறைந்துவிடும் என்ற நினைப்பால் கணிதர் இவ் விடயத்தில் மௌனம் சாதிக்கின்றார்.

திருக்கணித பஞ்சாங்கப்படி செப்டெம்பர் 25-ந் திகதி குறிக்கப்பட்ட நவராத்திரி விரதாரம்பம் சரியானது. சாஸ்திரீயமானது. கடந்த காலங்களில் சிவராத்திரி, நவராத்திரி தினங்களை சரிவரக் கணித்து மக்களின் பாராட்டைத் திருக்கணித பஞ்சாங்கம் பெற்று வருவது வெளிப்படை. செப்டெம்பர் 25-ந் திகதியென வாக்கிய பஞ்சாங்கத்திலும் நவராத்திரி ஆரம்பம் குறித்திருப்பதால்

வாக்கிய கணிதர் மறைமுகமாக திருக்கணித பஞ்சாங்கத்தைப் பின்பற்றுகின்றார் என்பது தெட்டத் தெளிவாகப் புலனாகின்றது. இவ்வாறே திருக் கணித முறைகளைப் பின்பற்றிச் சரியான முறையில் திருத்தமாகத் தனது பஞ்சாங்கத்தை வெளியிடுவாரானால் இப்படியான சர்ச்சைகள் ஏற்பட இடமிருக்காது.

சி. நடராசா, பலாலி.

**சந்:** சூரிய குடும்பத்தில் இருந்து இயங்கும் பூமியில் மனிதன் வாழ்வதானால் சூரிய குடும்பத்து அனைத்துக் கிரகங்களின் தாக்கமும் மனிதனில் இருக்கத்தானே வேண்டும்! அப்படியாயின் யுரேனஸ், நெப்டியூன், புளூட்டோ ஆகிய கிரகங்களும் கண்டிப்பாக ஆதிக்கம் செலுத்தும். ஆனால் இவையின் திசை புத்தியை வரையறுக்கவில்லையே. இவற்றின் திசைகள் எப்போது நடைபெறும் என்று வரையறுக்காமல் மற்றக் கிரகங்களின் பலனைக் கூறும்போது இடையில் இக் கிரகங்களின் தசாபுத்தி வந்தால்...? இதுவரை நாம் சொல்லி வந்த சோதிடங்கள் பொய்தானே? மனச்சாட்சியோடு ஒத்துக்கொள்வீர்களா?

**நிவி:** சூரிய குடும்பத்தில் உள்ள கிரகங்களில் நமது திருஷ்டிக்குத் தெரியக்கூடிய கிரகங்கள் சந்திரன் முதல் சனி வரையுள்ள ஏழு கிரகங்களே. சந்திர சூரியரைக் காலத்துக்குக் காலம் மறைக்கும் இராகு கேதுக்களும் எமது திருஷ்டி மையத்திற்கு உட்பட்டவையே. இந்த ஒன்பது கிரகங்களும் நம்மை நமது புறக்கரணங்கள், அகக்கரணங்கள் மூலம் தாக்குகின்றன. இந்தத் தாக்கங்களை நாம் அறிந்து கொள்வதற்கு வகுக்கப்பட்டதே தசாபுத்திக் கிரமம். நமது திருஷ்டிக்கு அப்பாற்பட்ட யுரேனஸ், நெப்டியூன், புளூட்டோ எம்மை எமது அந்தக் கரணங்கள் வாயிலாகத் தாக்குகின்றன. இவற்றின் தாக்கங்கள் எமக்குப் புறத்தில் அனேகமாகத் தோற்றுது. அப்படித் தோற்றும்போது தசாக் கிரகங்கள் (குறிப்பிட்ட 9 கிரகங்கள்) மூலமே அவற்றை அவ்வக் கிரகங்களின் அமைப்பைக் கொண்டு அறிய வேண்டும். உதாரணமாக நடப்புத் தசாநாதனுக்குக் குறிப்பிட்ட மூன்று கிரகங்களில் ஒன்றோ அதிகமோ அண்மையில் அல்லது கேந்திர திரிகோண திருஷ்டியில் அமையுமானால் குறிப்பிட்ட கிரக ஆதிக்கம் பலன்களில் பிரதிபலிக்கத்தான் செய்யும்.

இங்கு நாம் வலியுறுத்த வேண்டிய முக்கியமான அம்சம் என்னவெனின் யுரேனஸ், நெப்டியூன், புளூட்டோ ஆகிய கிரகங்களுக்கு தெசா காலங்களை ஆட்சி பண்ணுமளவுக்கு பெலமில்லை யென்பதே. இவற்றின் கதிர்கள் எம்மைச் சுலபத்தில் வந்து தாக்குவதில்லை. மனோவேகம், உணர்ச்சிச் செறிவின் கூர்மையைப் பொறுத்தே இவற்றின் தாக்கங்கள் அமைகின்றன.

M. ராஜேஸ், விசாவிளான்.

**சந்;** *30-3-1962* அதிகாலை 6-12 மணிக்குப் பிறந்த எனது கிரகநிலையைத் தருக. யுரேனஸ், நெப்டியூன், புளூட்டோ எந்தெந்த நட்சத்திர பாதத்தில் நிற்கின்றன என்பதையும், புதன் அஸ்தமன மடைந்துள்ளதா என்பதையும் அறியத்தரவும்.

**நிவி:** உதயலக்கினம்-மீனம்; நட்சத்திரம் - பூராடம் 4-ம் பாதம். ராசி-தனுசு. கிரகநிலை வருமாறு; மேடத்தில்-சுக்கிரன்; கடகத்தில்-ராகு; சிங்கத்தில்-யுரேனஸ், புளூட்டோ; தனுவில்-சந்திரன்; துலாத்தில் - நெப்டியூன்; மகரத்தில் - சனி, கேது; கும்பத்தில் - குஜன், குரு, புதன்; மீனத்தில்-சூரியன், யுரேனஸ் - மகம் 2-ம் பாதத்திலும்; நெப்டியூன்-சுவாதி 4-ம் பாதத்திலும், புளூட்டோ பூரம் 1-ம் பாதத்திலும் உள்ளன. புதன் அஸ்தமனமடையவில்லை.

மகா. சுலோசனா, மயிலிட்டி.

**சந்:** *11-10-1978* இரவு 7-49க்குப் பிறந்த ஒரு பெண்ணின் கிரகநிலை, நட்சத்திரம், மகாதசை என்பவற்றைத் தருக.

**நிவி:** உதயலக்கினம்-மேடம்; நட்சத்திரம்-அவிட்டம் 1-ம் பாதம். ராசி - மகரம். கிரகநிலை வருமாறு: கடகத்தில்-குரு; சிங்கத்தில்-சனி; கன்னியில்-சூரியன், ராகு; துலாத்தில் - புதன், குஜன், சுக்கிரன், யுரேனஸ்; விருச்சிகத்தில்-நெப்டியூன்; மகரத்தில் - சந்திரன்; மீனத்தில் - கேது, குஜன் மகாதசையில் இருப்பு 6 வரு. 11 மாதம் 8 நாள்.

---

குறிப்பு:- சந்தேகங்களை கேட்பவர்கள் போஸ்ட் காட்டில் மட்டும் சொந்த விலாசத்துடன் எழுதிக் குறிப்பிட்ட விலாசத்தை வெட்டி ஒட்டி அனுப்ப வேண்டும். ஒரு போஸ்காட்டில் ஒரு கேள்வி மட்டும் கேட்கலாம்.

''சந்தேக நிவிர்த்தி'' சோதிடமலர்
திருக்கணித நிலையம்
மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி

## துலா லக்ன ஆணும் இடப லக்கினப் பெண்ணும் சேர்வதால் ஏற்படும் பலாபலன்கள்

வே. சின்னத்துரை - நல்லூர்

இதில் இரு லக்கினகாரரும் உயர்ந்த மன நிலையை விருத்தி பண்ணுவதில் முயல்வார்கள். எல்லாவிதமான உலக கலைகளிலும் கவனமெடுப்பார்கள். இதனுல் இருவருக்கும் ஒத்த உறவு நிலவும். ஆனுல் நித வாழ்வில் தாங்கமுடியாத அளவுக்கு அவளை அவர் நச்சரிப்பார். ஒரு வாரத்தில் அவர் தன்னைத்தானே தன் வேலைவெட்டிகளில் அவளொருத்தி இருக்கிருளே என்று எண்ணுமல் ஈடுபடுத்தி மூழ்கியிருப்பார். அதன் பின்பு சடுதியாக முழுச்சோம்பேறித்தனமாக இருப்பார். இக்காலம் எல்லாத் தீர்மானங்களும் பின்போடப்பட்டுவிடும். துலாலக்கினகாரர் தன்னைத்தான் ஒரு மணித்தியாலத்துக்கு மாத்திரம் ஈடுபடுத்தக் கூடியதாகவுள்ள திட்டங்களை மாத்திரம் இடப லக்கினகாரி தன்வாழ்வில் திட்டமிடுவாள். அவரை அவள் தீவிரப்படுத்த முயற்சித்தால் இரு பகுதியிலும் உக்கிரமான துஷ்பிரயோகம் உண்டாகும்.

தனது வாழ்வில் பாதுகாப்பான ஒரு அஸ்திவாரத்தை உண்டுபண்ண நிலையான தொழிலும், நிலையான வரும்படியும் உள்ள ஒருவரையே அவள் விரும்புவாள். அவருடைய மனப்பான்மை இதற்கு எதிர்மாருனதாகும். எந்த விதத்திலும் காரியக்கிரமங்களை அவர் வெறுத்து தன்னைத் தெளிவு படுத்தக் கூடிய ஒரு தொழிலையே தேடுவார். இவர் ஒரு திருத்தமுடியாத சரசகாரர். ஒன்றுக்குமல்லாமல் தன் தற்பெருமைக்காக இவர் இப்படி நடிப்பார். இடப பொருமை இதை ஏற்க மறுக்கும்; ஆதலால் அவள் தன்னைத் தான் கட்டுப்படுத்த வேண்டும். வன்மையாக எப்படியெனினும் அவவுடைய திடீர்ப்பாய்ச்சல்களை துலாக்காரர் சகித்துக்கொள்வார். தங்களுடைய உறவுகளில் எந்தத் தீர்மானங்களையும் எடுக்க முன்பு அத்தீர்மானங்கள் சரியானவை என்பதை அவள் நிச்சயிக்கவேண்டும். ஏனெனில் ஏதும் பிசகிப்போனுல் அவளை அவன் நிந்தை செய்வான்.

பாலீர்ப்பு இருவருக்கும் பெலம் பெற்றிருப்பதால் படுக்கையில் அங்க அவயவ விடயத்தில் ஒருவித பிரச்சனையும் எழாது. வெளியுலகத்துடன் சீவிக்க வேண்டுமென்பதை சீக்கிரமோ தாமதமாக்வோ அவர்கள் உணர்வார்கள். இது மெதுவாக அவர்களுடைய பாலுறவுகளை அழிக்கும். எல்லாம் இப்படி நடந்துகொண்டிருக்கையில் தங்களுடைய சீவியத்திலிருக்கும் ஒட்டுறவுகளை ஒரு கலையை எப்படி நாடுவார்களோ அப்படியயன் படுத்துவார்கள் பரிசோதனைமூலம் பூரணத்துவம் எய்த.

இது ஒரு குறைந்த கால உறவு.

## நுழை வாயில் தெரியவில்லையோ?

### கோப்பாய் எஸ். சிவம்

தாயேஉன் சேய்நான் என் றறியாயோநீ - உன்
தாய்மைஇத் தமியேனை உணராததோ?
நோயேறித் தவிக்கும்என் இதயத்திலே - ஒரு
நுழைவாயில் காணுது இருப்பாயோ நீ

உன் தாள்கள் துணைஎன்று உனைநாடினேன் - நீ
என்னோடேன் ஒளிந்தோடி விளையாடினுய்?
என்கால்கள் உனைத்தேடித் தினம் வாடின- இனி
இயலாது எனக்குன்றன் முகம் காட்டுவாய்.

அபிராமிப் பட்டருடன் விளையாடினுய் - அவர்
அந்தாதி உனக்காகப் பாடித் தந்தார்
சபையேறி அறியாத சிறியேனுடன் -உந்தன்
விளையாட்டை நீவைத்தல் முறையாகுமோ?

துயரத்தின் இருள்சூழும் இதயம் தனில் - நில(வு)
ஒளியாகி நீவந்து துயர்போக்குவாய்
வயல்சூழும் பதிகோவை உறைதேவியே - என்
மகமாரி நீவந்து வரம் நல்குவாய்!



# காகங்களின் முன்னறிவிப்புகள்

V. S. ஸ்ரீகந்தசாமி
வத்திராயன் வடக்கு,
தாளையடி.

இப்புவியில் பிறந்த ஒவ்வொரு ஆன்மாக்களும் முற்பிறவியில் செய்த பாவ புண்ணிய பலன்களை இப்பிறவியில் அனுபவித்தே தீரவேண்டுமென்ற தத்துவத்தை யாரும் மறுக்கமுடியாது. பிதிர் புண்ணியாதி கருமங்களில் பிதிர்களுக்கு நிவேதனம் செய்யும் அன்னம் ஆகாரம் ஆகியவற்றை நாம் பிதிர்களுக்காக காகங்களுக்கே உண்ணக்கொடுக்கிறோம். காகம் சனீஸ்வரனின் வாகனமாக தெய்வீக தொடர்பு கொண்டதினால் என்னவோ பின்வரும் கருமங்களை எங்களுக்கு தங்கள் சைகைகள் மூலம் எடுத்துக்காட்டி எச்சரிக்கை செய்கின்றன. காக்கைகளின் தெய்வீக சக்தியையுணர்ந்த முன்னோர் காக்கைகள் செய்யும் சைகைகளை ஆராய்ந்து தமது அனுபவங்களை சாத்திரவடிவமாக பலன்களாக எழுதியுள்ளார்கள்.

கரிமகள் கதறும் போது கடுகவே யடியாளரிந்து
ஓர்பத்து மிரண்டுங் கூட்டி யோரேழுக் கீந்த [சேடம்
வருவது சுகம் மிலாபம் மழைபடை யாகாரம் [வெற்றி
கருதியே சாவுண்டென்று கற்றுணர்ந்தோரி [சொன்னாராமே

படுக்கை விட்டெழும்போதும் பிரயாணத்தின் போதும் காகம் இடமிருந்தாலும், வலமிருந்து இடம் பறந்தாலும் தலை மட்டத்தின் கீழ் பறந்தாலும் நன்மையே நடைபெறும். கரைந்த வண்ணம் எதிரில் வந்தாலும், பயணம் போவோரை பின் தொடர்ந்து சென்றாலும் நன்மையில்லை, ஆபத்து நேரும். பசு, எருமை, ஆடு, பால்மரங்கள், வாழை ஆகியவற்றில் இருந்து கரைந்தால் நல்ல உணவு கிட்டும். குஷ்டை பிடித்த வீட்டுப் பன்றி மீதிருந்து அழுதால் நினைப்பவை நடக்கும். காட்டுப் பன்றி மீதிருந்து கத்தினால் சிறை செல்ல நேரும். புறப்படும்போது காகம் எதையாவது வாயில் கொண்டுவந்து முன்பக்கம் வைக்குமானால் போகிறகாரியம் நிறைவேறும். பொருள் சேரும். ஆனால் நம்பக்கமிருந்து எதையாகிலும் எடுத்துச் சென்றால் பொருள் நஷ்டமேற்படும். சிறகைக் கோதிக் கோதிக் கரைந்தால் அல்லது ஒற்றைக் காலில் நின்று சிறகைக் கோதிக்கொண்டு அழுதாலும், நிலத்தைச் சொண்டால் கீறிக் கீறி அழுதாலும் நீர், நெருப்பு, பகைவர் அல்லது கள்வர் அதிகாரிகள் தொல்லை அல்லது சிறைப்படல், மரண அவஸ்தை ஆகியவையுண்டாம். செருப்பு குடை போன்ற பிரயாணப் பொருள்கள்மீது சிறகால் அடித்தால் அல்லது கொத்தவோ செய்தால் அவற்றை உபயோகிப்பவர்களுக்கு ஆபத்துண்டாம். இப்பொருட்கள்மீது பூக்களை வைத்தால் புகழ், கீர்த்தி உண்டாகும். ஒரு வீட்டின் மீது சிவந்த பூக்கள், கரிக்கட்டைத் துண்டு, காய்ந்த இலை இவற்றை வைத்தழுதால் அந்த வீடு தீப்பற்றும் அல்லது அந்த வீட்டாருக்கு விபத்து காயமேற்படும். காய்ந்த முள் தடியை வாயில் வைத்துக்கொண்டு வந்து காகம் கரைந்தால் மிருகபயம் அல்லது ஆயுதபயம்; கரித்துண்டு வாயிலிருந்தால் சர்வபீடை; எலும்புத்துண்டு நோய்; இரும்புத்துண்டு சிறை; முட்கம்பி வாயில் வைத்திருந்து கரைந்தால் கள்வர் தொல்லை ஆகியவற்றைக் குறிப்பனவாகும். காரணமின்றிக் காகம் இரவில் கரைந்தால் தொற்றுநோய் பரவும். காகங்கள் கூட்டமாய் பரபரப்புடன் கத்திக்கொண்டு ஊர் மத்தியில் வலம் வந்தால் அந்தக் கிராமத்தில் சண்டை, சச்சரவு ஏற்படும். காரணமின்றி காகங்கள் சண்டையிட்டு கொத்துப்பட்டாலும் அடிபிடி சண்டை வரும். காரணமின்றிக் காக்கைகள் கூட்டம் போட்டு அழுதால்

துர்க்குறி நிகழும். படுக்கைமீது எலும்பு, சாம்பல், காய்ந்தபுல், தலைமயிர் முதலியவற்றைப் போட்டால் துக்க சம்பவத்தை முன் கூட்டியே தெரிவிப்பதாகும். மரப்பொந்துகளுக்குள்ளிருந்து கத்திஞல் பயத்தையும் தண்ணீரைப் பார்த்து அல்லது இடிமுழக்கத்தின் பின்பு இடைவிடாது கத்திஞல் மழை வருமென்பதையும், நடந்து நடந்து அல்லது பறந்து பறந்து ஓசையுடன் இசை பாடிஞல் விருந்தினர் வரவையும், விக்கி விக்கி சினுங்கியழுதால் பிறவூரிலிருக்கும் உறவினர் உணவுக்கு கஷ்டப்படுவதையும் எடுத்துக் காட்டுவதாகும்.

3¾நாழிகை கொண்ட முகூர்த்த பலன்கள்:

1-வது லாபம், 2-வது சேதம், 3-வது வரவு, 4-வது தனம், 5-வது மழை, 6-வது யுத்தம், 7-வது மரணம், 8-வது அலிங்கிஷம்

திக்கு பலன்கள்:

கிழக்கு ஆதாயம், தென்கிழக்கு மரணம், தெற்கு தனலாபம், தென்மேற்கு சுபம், மேற்கு கலகம், வடமேற்கு அபாயம், வடக்கு விருந்து, வடகிழக்கு பொல்லாங்கு.

கூடு கட்டும் பலன்கள்:

வேம்பு அரசு முதலிய வழிபாட்டு மரங்கள், நெற்போர், பாம்புப்புற்று ஆகியவற்றின்மீது கூடு கட்டிஞல் வறுமை, வறட்சி, நோய், பிணிகள், கள்வர் ஆகியவற்றிஞல் தொல்லையுண்டாம். காரணமின்றித் தமது முட்டையைப் போட்டு டைத்தாலும், அங்கக் குறைவுகளுடன் குஞ்சு பொரித்தாலும் மழையின்றி வரட்சியுண்டாம். குளிர்ச்சியால் தழைத்து பூத்துக் குலுங்கும் மரங்கள்மீது கூடு கட்டிஞல் நாட்டு மக்களுக்கு நலம் உண்டாம்.

# இலங்கைச் சோதிட ஆய்வு மன்றம்

மேற்படி மன்றத்தின் ஆவணி மாதக் கூட்டம் 26-8-84ல் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் மாலை 3.25க்கு திரு. வ. முருகேசு அவர்களின் தலைமையில் ஆரம்பமாயிற்று. சென்ற கூட்ட அறிக்கையும் பொருளறிக்கையும் வாசித்த பின் சிறப்புரை திரு வே. சின்னத்துரையால் ''என் பிள்ளைக்கு எப்போ கலியாணம்'' என்னும் விடயம் பற்றி விரிவுரை நடாத்தப்பட்டது. ஒருவருக்கு விவாகம் நடக்குமா இல்லையா என்பதை 7ம் வீடு உதயமாகும்போது உதிக்கும் முனை ஒரு இராசியில், ஒரு நட்சத்திரத்தில், ஒரு புத்திநாதனில் நிலைக்கும். அப்புத்திநாதன் 2, 7, 11ம் வீட்டில் ஒன்றையாகுதல் குறிகாட்டுமாயின் அந்நபருக்கு விவாகம் நடந்தேறும். அப்புத்திநாதன் 4,6,10ல் ஒன்றைக் குறிகாட்டுமாயின் அந்நபருக்கு விவாகமேயில்லை. 2,7,11ஐயும் 4,,6, 10யும் கலந்து குறிகாட்டுமாயின் காலங் கடந்த விவாகம் நடக்கும். சந்திரனும் சனியும் புநர்ப்புக் கொள்ளின் விவாகத்தை தடைப்படுத்தி பின்பு நல்ல சம்பந்தத்தைக் கொடுக்கும். சனி 1,3,5,7, 10ம் வீடுகளில் நின்ருலும் அல்லது சனி சந்திரனின் நட்சத்திரத்துறைந்து சனியின் புத்திநாதனில் நின்ருலும் அல்லது சந்திரன் சனியின் நட்சத்திரத்திலும் சந்திரன் புத்திநாதனில் நின்ருலும் தடையைக் கொடுத்து பின்பு நல்ல திருமணம் கொடுக்கும். 7ம் வீட்டில் நிற்கும் துர்க்கிரகமும் 7ம் வீட்டைப் பார்க்கும் துர்க்கிரகமும் திருமணத்தை தடைப்படுத்துமென்ருர்.

பின்பு திருமணம் நடவாமலிருக்கும் சாதகங்களையும், தடையைக் கொடுத்திருக்கும் சாதகங்களையும் சாந்தியின்பின் தடைகள் நீங்கி திருமணம் நடந்த சாதகங்களையும் கரும்பலகையில் போட்டு விளங்க வைத்தார்.

கலந்துரையாடலில் குறிகாட்டிகள் என்பதற்கு திரு. க. சாம்பசிவம் விளக்கம் கேட்டார். அதற்கு விரிவுரையாளர் விளக்கம் கொடுத்தார்.

பின்பு 'என்பிள்ளைக்கு எப்போ கலியாணம்' என்னும் நூல் விநியோகம் நடைபெற்றது. அதில் சாந்தி செய்யும் முறை எப்படி என்பதை விளங்கப்படுத்தியிருந்தது.

இதர விடயங்களில் திரு. மு: மு. மார்க்கண்டு அவர்கள் இலங்கைச் சோதிட மன்றம் சிறந்த சோதிடர்களுக்கு பட்டமளித்து கௌரவிக்க வேண்டும் என்ற ஒரு பிரேரணை கொண்டுவந்தார். இதை திரு. க. சாம்பசிவம் ஆமோதித்தார். இதைச் செயல்படுத்த மன்றம் ஆவன செய்ய வேண்டும் என்று தீர்க்கப்பட்டது. பின்பு மாலை 4.30 மணியளவில் கூட்டம் நிறைவேறியது.

சரோஜினிதேவி சுப்பையா, பூநகரி.

கேள்வி: என்னுடைய பிறந்த திகதி 14-9-1960 புதன்கிழமை இரவு 2 மணி 21 நிமிஷம் என ஜாதகத்தில் இருக்கின்றது. ஆனல் பிறப்புச்சான்றிதழில் 15-9-1960 என்று எழுதப்பட்டிருக்கின்றது. எனவே என்னுடைய உண்மையான எண் என்ன? பெயர் எப்படி எழுதுவது?

பதில்: ஆங்கிலத் திகதிப்படி 15-9-1960 என்பது சரியான திகதியாகும். புதன்கிழமை இரவு 12 மணிக்கு பின்பு அடுத்த நாளான 15-ம் திகதியே அதிஷ்ட எண்ஞான முறைப்படியும் எடுக்கப்படும். ஆங்கில முறையும் அப்படியே ஆகும். பிறப்பு எண் 6 ஆகும். கிரகஜாதகப்படி சூரியன் அதிக

## எண்சோதிடர் இ. மகாதேவர்

தாக்கத்தைத் தரவல்லது. உங்கள் பெயரை S.Sarogenidevi என 46-ல் வரும்படி எழுதவும். மாணிக்கம் அல்லது முத்து அதிஷ்டக்கல் ஆகும். பால எண்சோதிடம் 27-ம் பக்கம் நவகட்டளைப் படி உங்கள் பெயரை பயிற்சி செய்து வரவும். மிகவிரைவில் வாழ்வில் பல வழியிலும் முன்னேற்றங்கள் ஏற்பட்டுச் சிறப்படைவீர்கள்.

வி. தினகரன் ராஜாராம், வெள்ளவத்தை.

கேள்வி: எனது பிறந்த திகதி 9-4-1948. எனது ஜாதகக் குறிப்பையும் எழுதியுள்ளேன். V. Ti. Rajaram எனக் கையொப்பமிடுகின்றேன். இது சரியா? பிழையாயின் எப்பெயரில் பொருத்தமாகக் கையொப்பமிட வேண்டும். எக்கல் நான் பாவிக்க வேண்டும்?

பதில்: உங்கள் ஜாதகக் குறிப்புப் படியும், பிறந்த திகதிப்படியும் சூரியன்-செவ்வாய், வியாழன், சனியின் தாக்கம் மாறி மாறி ஏற்படும். இருப்பினும் சூரியனின் அனுகூலமான சக்தியையும், எதையும் ஈடுசெய்யும் அமைப்புள்ள இயல்பையுடைய பெயராகிய V.T. R. Ram 19ல் பெயரை எழுதி எமது புத்தகமான பால எண் சோதிடம் 27-ம் பக்கம் நவகட்டளைப்படி செயற்பட்டு வரவும். அதிஷ்டக்கல் மாணிக்கத்தைப் பாவித்து வரவும்.

எம். எம். அபூபக்கர்,
மருதி ரோடு, பெரியகடை, மன்னார்.

கேள்வி: எண்களின் சோதிட ரீதியில், எண்களின் நட்சத்திர ரீதியில், பெயர் எண்களின் சோதிட நட்சத்திர ரீதியில் எந்த எண்களுள்ள பெயர்களில் – அதிஷ்ட லாபச் சீட்டு எடுத்தால் அதிஷ்டமுண்டாகும். முதல் எழுத்துக்களை விபரமாகச் சோதிடமலரில் வெளியிட வேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றேன்.

பதில்: அதிஷ்ட எண்ஞானம் தனிவழியானது. ஒழுங்கு அமைப்பானது. அடிப்படையில் பல இரகசியங்களைக் கொண்டது. பிறப்பு எண்—கூட்டெண் 9க்குட்பட்டவற்றை ஒற்றை எண் என்ற அடிப்படையில் பொதுப்பலனையே சோதிடமலரில் எழுதி வருகின்றேன். பொதுப்பலன் முடிந்ததும் தொடர்ந்து கூட்டு எண் அமைப்பு — இராசிமண்டல அமைப்புடன் சம்பந்தப்பட்ட ஆராய்ச்சிகள் வெளிவரவுள்ளன. இதனல் அனேகரின் சந்தேகங்கள் தீர்க்கப்படும். ஜாதக ஜோதிடம் பார்க்காமலே அதிஷ்ட எண்ஞானத்தால் எப்பிரச்சினைகளையும் இப்பூவுலக மனிதன் தீர்த்துக்கொள்ள முடியும். நீங்கள் பிறப்பு எண்ணையும், பெயர் எண்ணையும் கூட்டிவரும் எண்ணுக்கு பால எண் ஜோதிடம் — பெயர்மாற்றம் 26-ம் பக்கத்தில் விபரமாகக் குறிப்பிட்டுள்ளேன். அதன் விபரங்களைப் பார்த்து நீங்கள் அதிஷ்டகரமாக வாழ வழிகாட்டும் திகதிகள், மாதங்கள், நிறங்கள், இரத்தினங்களைக் குறிப்பிட்டுச் செயற்படுத்தி வரவும். அதிஷ்ட எழுத்துக்களுக்கு அவ்வாறு கூட்டிவரும் இராசி எண்களுக்குப் பொருத்தமான கிரகம் உ+ம் 3-ம் எண் ஆனல் வியாழன் S,L, G,C-ல் அதிஷ்டலாபச் சீட்டுக்களை எடுத்து இலாபம் அடைய முடியும்.

எஸ். பி. பாலசுப்பிரமணியம், கொழும்பு—11

கேள்வி: 16-3-1959 எனது பிறந்த திகதி. எனது பெயரை S. P. Shubramaniam என 46-ல் எழுதி

## பதில் தருகின்றார்

வருகின்றேன். எச்செயலும் காலதாமதமாகியே வருகின்றது. சில சந்தர்ப்பங்களில் நண்பர்களும் பகைவர்களாகின்றார்கள். எனது வாழ்வு பிரகாசமாக வழி கூறுங்கள்?

பதில்: நீங்கள் தற்பொழுது எழுதிவரும் பெயர் பொருத்தமானதாகும், ஆனல் அதைப் பயிற்சி செய்து வருவதிலும், உங்கள் பழக்கவழக்கங்களிலும் தவறுகள் நடக்கின்றன. எனவே எமது பால எண்சோதிடம் – பெயர் மாற்றப்படி 27-ம் பக்கம் - நவகட்டளைப்படி செயற்பட்டு வர கிரகச் சக்தி அதிகரித்து நிடசயம் நல்ல முன்னேற்றங்கள் ஏற்படும்.

# அதிஷ்ட எண்களில்
## உங்கள் தொழிலைத்
## தெரிவு செய்யுங்கள்

— இ. மகாதேவா, 140, செல்லர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் —

(ஆவணி மாதத் தொடர்ச்சி)

**எண்-1 சூரியன்**

அரசாங்க உத்தியோகம் (நிர்வாகப்பகுதிகள்) இராணுவத்தில் முதன்மையான பதவிகள், டாக்டர் அல்லது ஆஸ்பத்திரி வேலைகள், மருந்துத் தொழிலில் தொடர்பு, மரவியாபாரம், கலைப் பொருட்கள் வியாபாரம், புத்தக வியாபாரம், கணக்குத்துறை (எண் பரிசோதகர், கணக்காளர்), அரிசி ஆலை சம்பந்தப்பட்ட தொழில்கள், உணவு விடுதிகளை நடாத்துதல், ஏற்றுமதி - இறக்குமதி வியாபாரம், அரசியலில் தொடர்பு, நடிப்புத்துறை, கப்பற்றொழில் முதலியன.

**எண் - 2 சந்திரன்**

அரசாங்க உத்தியோகம், ஆசிரியர், கற்பனை-எழுத்தாளர்-பேச்சாளர்கள், சந்தை வியாபாரம், சிறுகைத்தொழில், ஹோட்டல், மின்சார வேலைகள், விவசாயம், வாசனைப் பொருள் உற்பத்தி, கலர் (Dye) கடைகள், புடவைத் தொழில் அல்லது கடை, கட்டிடத்தொழில், கடற்றொழில், கப்பல் தொழில், கடத்தல் தொழில், ஆஸ்பத்திரியில் கலகலப்பான வேலைகள், பண்ணைத்தொழில், சினிமாப்படத் தியேட்டர், ரி. வி. றேடியோத் தொழில், அச்சுத்தொழில், ஸ்ருடியோ, கம்பியூட்டர், மருந்துச் சாமான்கள், பொதுநலத் தொண்டு, நீர் அல்லது நாளாந்த மக்களுக்குத் தேவையான பொருட்கள் உற்பத்தி முதலியன.

**எண் - 3 வியாழன்**

அரசாங்கத்தில்-அரசாங்கத்திற்கு வருமானம் வரும் பதவிகள் (உ-ம்: வருமான வரி இலாகா, வங்கிகள், பொருளாதாரத்துறை), கோவில் வேலைகள், ஆசிரியர்கள், இன்சூரன்ஸ் வேலைகள், ஜோதிடம், போக்குவரத்து சேவை, வழக்கறிஞர்கள், நீதிமன்ற வேலைகள், காவல்துறைகள், ஆராய்ச்சி துறைகளில் வேலை, நகை வியாபாரம், அச்சுத் தொழில், அச்சுப் பிரதிகள் விற்பனை, புரோக்கர், சமூகசேவை, போக்குவரத்துச் சேவை முதலியன.

**எண் - 4 இராகு**

இயந்திரங்களுடன் சம்பந்தமான வேலைகள், அரசாங்கப் பதவிகள், அரசியலில் தொடர்புகள், வெளிநாடுகளில் வேலைவாய்ப்புக்கள், போக்குவரத்துத்துறையில் தொடர்பு, கடத்தல் - கடல் வேலைகள், சூதாட்டம்-களவு-அடிக்கடி தண்டனை பெறுவர், விமானப் பகுதியில் வேலை, பெற்றோல்-எண்ணெய்த் தொழில், எடுபிடி வேலைகள், வழக்கறிஞர் — நீதிமன்றம் தொடர்பான வேலைகள் முதலியன.

**எண் – 5 புதன்**

தலைசிறந்த வியாபாரிகள், புரோக்கர்கள், கணக்கு சம்பந்தமான வேலை, எழுத்தாளர் - பத்திரிகைத்தொழில்—நூலாக்கம், ஆசிரியர், நகை வியாபாரம், வங்கி வேலைகள், கமிஷன்-ஏஜென்சி வேலைகள், ஜோதிடர்கள் முதலியன.

**எண் - வெள்ளி**

அரசாங்க உயர் அதிகாரிகள், நடிகர்கள், படத்தொழில், ரி. வி., வானொலி, ஸ்ருடியோ வேலைகள், நகைத்தொழில், வட்டிக்கடை, பெண்கள் விரும்பும் பொருட்களை உற்பத்தி செய்தல், கூட்டுறவு வேலைகள், ஹோட்டல், அரசாங்க வருமானப் பகுதி, பண்ணைத்தொழில் முதலியன.

**எண் - 7 கேது**

ஆன்மீகத்தொண்டு, கோவில் வேலைகள், ஆசிரியர்கள், மதப்போதகர்கள், வைத்தியத்துறை, சட்டவாதிகள்; பொலிஸ், இராணுவப் பாதுகாவற்துறை வேலைகள், விஞ்ஞான ஆராய்ச்சி, ஏற்றுமதி இறக்குமதி வியாபாரம்.

எண் - 8 சனி

அரசாங்க நிர்வாகப் பகுதிகளில் வேலைகள், வழக்கறிஞர் வேலை, கம்பனிகள், கூட்டுறவுத் தொழில், இரும்பு-வாகனம்-இயந்திரம் தொடர்பான வேலைகள், மருந்து உற்பத்தி - வைத்தியத் தொழில், ஏற்றுமதி-இறக்குமதி வியாபாரம், அரிசி ஆலைகள், காணி பூமி வாங்கி விற்போர்கள், புத்தக வியாபாரம், அச்சுத் தொழில், கோவில் வேலைகள்.

எண் 9 - செவ்வாய்

பொறியியல் வேலை, முப்படையில் தொழில், காவல் வேலை, மின்சாரப்பகுதி; தபால் தந்திப் பகுதி, விவசாயம், வியாபாரம், நெருப்புடன் சம்பந்தப்பட்ட வேலைகள்.

மேற்படி உதாரணத்திற்காக சில தொழில்களை இங்கு குறிப்பிட்டுள்ளேன். ஆதிக்கஎண்— பிறப்பு எண்ணுகை முழுப்பலனைச் செய்தால் மேற் கூறப்பட்ட தொழில்களைச் செய்வர்; ஆதிக்க எண் பிறப்பு + கூட்டு எண் அல்லது பெயர் எண்களுடன் உதாரணமாக 1-2-1944ல் பிறந்தவர்

பிறப்பு எண் 1

கூட்டு எண் 3

1 — 3க்குரிய பலன் "அதிஷ்ட எண்ஞான முறையில் உங்கள் தொழிலைத் தெரிவு செய்யுங்கள்" என்ற புத்தகத்தில் விரிவான முறையில் எழுதப்பட்டுள்ளது.

தொழில் சிறப்படைய (1) பணம் வேண்டும். (2) இடம் வசதியாக அமைய வேண்டும். தொழிலைப் பற்றிய அறிவு; பொருத்தமான தொழில் அமைவு வேண்டும். (4) பங்காளர் அல்லது உதவியாளர்கள் வேலையாட்கள் உங்களுக்கு உதவ வேண்டும்.

மேற்கூறப்பட்டவற்றை விரிவாக அறிய முற்படுங்கள். உங்கள் தொழில் விருத்தியாகி முன்னேறிவர அதிஷ்ட எண்ஞானம் எவ்வாறுதவும்?

உதாரணமாக— நீங்கள் தெரிவு செய்யும் இடத்தைப் பற்றிச் சற்று ஆராய்வோம். இலங்கையைப் பொறுத்தளவில் நீங்கள் உங்களுக்குப் பொருத்தமான தொழிலை எந்த மாவட்டத்தில் ஆரம்பிக்க வேண்டும் என முடிவு எடுங்கள்.

முதலில் உங்கள் ஆதிக்க எண்ணை அறிந்த பின்பு அதற்கு சாதகமான இடத்தைத் தெரிவு செய்ய வேண்டும்.

6-ம் எண் ஆதிக்கருக்கு பொருத்தமான இடம் உதாரணமாக கொழும்பு Colombo - 33-ம் எண் தொழில் நுட்பம் சம்பந்தமான தொழில்கள், யாழ்ப்பாணம் Jaffna - 24. வியாபாரம், கைத்தொழில், நீர்கொழும்பு–Negombo -33 — கடல் சம்பந்தப்பட்ட வியாபாரம், புடவை, தொழில் நுட்பம் ஆகியவற்றிற்கு இம்மூன்று மாவட்டங்கள் பொருந்தும். ஒருவருடைய ஆதிக்கஎண் கூட்டுஎண் அடிப்படையில் நாம் ஆராய வேண்டும். இடத்தைப் பற்றிச் சிந்திக்கும்பொழுது எந்த இடத்தில் என்ன தொழில்? தொழில் இடத்தின் அதிஷ்ட எண், தொழில் இடத்தின் பெயர் எண் என்பவற்றை முதலில் தெரிவு செய்தல் வேண்டும். தனிப்பட்ட ஒவ்வொருவருக்கும் இத்தெரிவு மாறுபட்ட தெரிவாக அமையும். ஒருவரின் சரியான தெரிவு அவரை நிட்சயம் வெற்றிப் பாதையில் முன்னேற்றமடையச் செய்யும்.

(முற்றும்)


## ஜோதிட ஆலோசனைகள்

உங்கள் எதிர்காலத்தை எமது ஆலோசனைகள் மூலம் வளம்படுத்த தினமும் எம்மை நாடிவரும் அநேக அன்பர்களில் ஏன் நீங்களும் ஒருவராக இருக்கக்கூடாது? ஜோதிடம், அதிஷ்ட எண் ஞானம், கைரேகைகள், வீட்டுக்கு நிலம் வகுத்தல் சம்பந்தமான அறிவுரைகள் வழங்கப்படும்.

சந்திக்கும் நாட்கள்:

சனி, ஞாயிறு, போயா தினங்களில் காலை 8.00 மணி தொடக்கம் பிற்பகல் 6.00 மணி வரையும், கிழமை நாட்களில் சந்திக்க வேண்டுமாயின், முன்னேற்பாடாகத் தொடர்பு கொள்ளவும்.

**மகாதேவா ஜோதிடம்**

140, செல்லர் வீதி,

(கல்வியங்காடு சந்தை அருகாமை)

நல்லூர் — யாழ்ப்பாணம்

# குறுக்கெழுத்துப் போட்டி

## இல. 29

### முதலாம் பரிசு ரூ. 50/-

**போட்டி நிபந்தனைகள்**

1. கீழ்வரும் சதுரத்தைப் பூர்த்தி செய்து உங்கள் பெயர், முகவரியையும் எழுதி தபாலட்டையில் மட்டும் ஒட்டி அனுப்பவேண்டும்
2. 1-10-1984க்குப்பின் கிடைக்கும் விடைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
3. சரியான விடையை அனுப்பி தேர்ந்தெடுக்கப்படும் முதலாவது அதிஷ்டசாலிக்கு ரூ. 50/- இரண்டாவது அதிஷ்டசாலிக்கு 6 மாத சோதிடமலரும், மூன்றுவது அதிஷ்டசாலிக்கு 3 மாதச் சோதிடமலரும் இனும்.
4. போட்டி ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.

விடைகள் அனுப்பவேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல. 29
சோதிடமலர்
மட்டுவில் — சாவகச்சேரி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆ 1 | 2 | 3 | 4 | ய 5 | 6 |
| 7 | 8 | ய 9 | ▓ | 11 | 12 |
| 13 | ங் 14 | 15 | 16 | 17 | ▓ |
| 19 | 20 | க 21 | 22 | ▓ | 24 |
| ▓ | ல 26 | 27 | க 28 | 29 | 30 |
| 31 | 32 | ▓ | 34 | 35 | ய 36 |

பெயர் ..........................................................

விலாசம் ..........................................................

..........................................................

**இடமிருந்து வலம்**

1 ஒரு வீட்டுக்குரிய ஆட்சிக் கிரகம் அவ் வீட்டுக்கு......... பெறுவதாகக் கொள்ளப்படும்.
7 இவ் வருடத்தைய கிரகநிலையில் சனி மேடத்தில் உள்ளது.
11 வலமிடமான இதனிறுதியில் 'வி' சேர்க்க வருவதற்குக் காரகன் புதன்.
13 ஆறு கடலுடன் சங்கமிக்கும் இடம் குளம்பியுள்ளது.
19 சோதிட பலன்களுக்கு இதன் நிலையே அடிப்படையானது. குழம்பியுள்ளது.
26 குழம்பியுள்ள இவ்வருடத்தின் பின்னிருஎழுத்துக்களை நீக்க இன்னேர் வருடமுண்டாகும்.
31 செவ்வாய் ஆட்சிபெறும் வீட்டின் முதலெழுத்து நீங்கியுள்ளது.
34 ஓர் விளையாட்டைக் குறிக்கும் இது கணிதத்துறையில் ஓர் பகுதியாகும். குழம்பியுள்ளது.

**மேலிருந்து கீழ்**

1 ஒருவரின் பிறப்பு அல்லது இறப்பினுல் அவரைச் சார்ந்தோருக்கு இதன் காரணமாக சமய கருமங்களில் பங்குகொள்ளல் மறுக்கப்படுகிறது.
2 மீனினங்களில் மிகப்பெரியது இது.
3 "தாமரை" மலர் ஒழிந்திருக்கின்றது.
5 பெண்களின் கண்களை குழம்பியுள்ள இதற்கும் ஒப்பிடுவர். குழம்பியுள்ளது.
6 சுக்கிரனை அதிதேவதையாகவுடைய நட்சத்திரம் முதலெழுத்து நீங்கி தலைகீழாகியுள்ளது.
16 மார்கழி 27-ல் குரு இவ்விராசிக்கு மாற்றமடைகின்றார். குழம்பியுள்ளது.
24 ஆண்டுக் கொன்றுக இது அதிகரிக்கும். குழம்பியுள்ளது.
29 ஜாதகத்தில் 9-ம் வீடு இவரைக் குறிக்கும்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 28-ன் விடைகள்**

இடமிருந்து வலம்

1. கிறீன்விச் 10. யாமம் 13. தசமுகன்
19. (தா)ரண 22. முழம் 25. பாம்பு 32. அரிட்டம்

மேலிருந்து கீழ்

1. கிரகணம் 4. வியாழன் 5. மச்சம்
14. பாரதம் 24. முகாரி 27. அ(ப்)பு

பரிசு பெறுவோர்:

1-ம் பரிசு: ப. தனஞ்செயன்
C/o க. பரமானந்தன்
அஞ்சலகம், புங்குடுதீவு.

2-ம் பரிசு: சு. சுவாமிநாதன்
பிரதான வீதி, பண்டத்தரிப்பு.

3-ம் பரிசு: ஆ. க. கதிரேசன் "லக்ஷ்மி வாசம்"
கரவெட்டி வடக்கு, வதிரி,

Registered as a News Paper at the G. P. O. Sri Lanka.

அபிவிருத்திப் பாதையில், ..........

யாழ்ப்பாணத்து நீர்வளம் குளங்களில் தங்கியுள்ளது.

காலந்தோறும் குளங்களை ஆழமாக்குவோம்

குளங்களில் அதிகளவு நீரைத் தேக்குவோம்

குளத்துநீர் பெருக்கால் கிணற்று நீரைப் பெருக்குவோம்

யாழ்ப்பாணத்து மூலவளம் பனைவளம் என்போம்

பனையை அதிகமாக வளர்த்துப் பயன் பல பெறுவோம்

வீதியோரங்களில் நிழல்மரம் நடுவோம்

வீட்டுத் தேவைக்கு எலுமிச்சை, தோடை நடுவோம்

விறகுத் தேவைக்கு சவுக்குமரம் உண்டாக்குவோம்

தென்னந்தும்பு பனந்தும்பு பயன்தர வழி செய்வோம்.

★ குளம் தோண்டல் ★ மரம் நடுதல் ★ பனை அபிவிருத்தி

என்பனவற்றிற்கு மில்க்வைற் தொழிலகம் உதவும்.

மில்க்வைற் தயாரிப்புகளின் மேலுறைகளை சேகரித்து கொடுத்து பரிசுகளைப் பெறவும்.

# மில்க்வைற் தொழிலகம்

த. பெ. இல. 77, யாழ்ப்பாணம் தொலைபேசி: 23233

## சந்தா நேயர்களுக்கு

அன்புடையீர்! அன்பு வணக்கம்.

தங்கள் கைகளில் கிடைக்கும் இச் 'சோதிடமலர்' என்றும் வாடாமலராக உங்கள் இல்லங்களில் நறுமணம் வீசி சகலருக்கும் வழிகாட்டியாக விளங்க வேண்டுமென்பது எமது அவா. தாங்கள் ஒவ்வொவருரும் புதுப்புது அங்கத்தவர்களை அறிமுகம் செய்து வைத்தால் மலரின் வளர்ச்சிக்கு மகத்தான தொண்டு புரிந்தவர்களாவீர்கள்.

| | | | |
|---|---|---|---|
| சந்தா விபரம்: இலங்கைக்கு மாத்திரம் | | வருட சந்தா | ரூ 40-80 |
| வெளிநாட்டுக்கு | (கப்பல்வழி) | வருட சந்தா | ,, 78-00 |
| மலேசியா | (விமான வழி) | வருட சந்தா | ,, 150-00 |
| இங்கிலாந்து | (விமான வழி) | வருட சந்தா | ,, 175-00 |

தனிப்பிரதி வேண்டுவோர் ரூபா 3-40 அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

கடிதம், காசோலை முதலியன அனுப்பவேண்டிய முகவரி:

உரிமையாளர் "திருக்கணித நிலையம்" மட்டுவில் வடக்கு — சாவகச்சேரி.

Edited by K. Sathasiva Sarma; Printed and Published by S. Sethambaranaatha Kurukkal Thirukkanitha Nilayam, Madduvil. Chavakachcheri, Sri Lanka. Phone: 289